பக்கங்கள்-16 | 03.பங்குனி.2024 | விலை-50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 433



## நீதிமன்றம் சென்றாலும் தமிழரசுக் கட்சி ஒரு இணக்கப்பாட்டுடன் பயணிக்கும் - பா.அரியநேத்திரன்

## யாழ்ப்பாண மேட்டுக்குடி சாதியவாதம், மதவாதம் இருக்கும் வரை தமிழ்த்தேசியம் சாத்தியமற்றது

## கோட்டாபய விமர்சிக்கப்பட வேண்டியவரா? மக்களால் மதிக்கப்பட வேண்டியவரா?

A. KUNARATNAM
NO: 142/1, HORAPATHANA ROAD, VAVUNIYA. TYRE CENTER TEL: 222 1574 / 0778951584. வவுனியா



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# யாழ்ப்பாண மேட்டுக்குடி சாதியவாதம், மதவாதம் இருக்கும்வரை தமிழ்த்தேசியம் சாத்தியமற்றது

**END CASTE DISCRIMINATION**

இன்று தமிழ்த் தேசியம் தொடர்பில் பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அந்தவகையில் இந்த தமிழ்த்தேசியம் என்றால் என்ன? ஏன் இந்த தமிழ்த் தேசியத்துடன் தமிழ்த்தரப்பு, தமிழ் மக்கள் பயணிக்கவேண்டும் என்கிற விடயங்கள் குறித்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய சூழ்நிலை இன்று எழுந்திருக்கிறது.

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்காக இந்தப் போராட்டம் இடம்பெற்றது. 1980களில் அல்லது அதற்கு முற்பட்ட காலங்களில் கூட அனைத்து ஆயுதக் கட்சிகளும் தமிழீழம் என்கின்ற ஒரு இலக்குடன் பயணித்தன. தமிழீழக் கனவு நிறைவேறும் நோக்கில் செயற்பட இறுதியில் அதனைக் குழப்பும் வகையில் இந்தத் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி குறிப்பாக இந்தியா, பூகோள அரசியல், இலங்கை அரசியல் என இதற்குள் ஒரு நீண்ட வரலாறு எழுதப்பட்டு அனைத்தும் நிறைவடைந்துவிட்டது.

இன்றைய அரசியல் போக்கு மாற்றமடைந்துள்ளது. ஈழப் போராட்டமானது மாவிலாறில் ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் நிறைவுக்கு வந்துவிட்டது என்பதுதான் இந்த ஆயுதப்போராட்டத்தின் இறுதி முடிவாக அமைந்துள்ளது. இதற்கிடையில் சகோதரப் படுகொலைகளின் மூலமாக இயக்கங்களும் துண்டாடப்பட்ட நிலைமைதான் இருக்கிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பன தங்கள் கட்சிகளின் தலைமைகளை யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்டு அல்லது மேட்டுக்குடிகளை மையமாகக் கொண்டுதான் தத்தமது கட்சியின் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தார்கள். ஆயுதப் போராட்டத்திலும் யாழ் தலைமையை கட்சித் தலைமையாகக் கொண்டு தான் இயங்கி வந்தார்கள். இந்த சூழ்நிலையில் தான் இணைந்திருந்த கட்சிகள் அனைத்தும் துண்டு துண்டாக பிரிந்துவிட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இன்று சிதறுண்டு தனித்தனியாக செயற்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தபோது தமிழ்த் தேசியத்தை சரியான கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்தார்கள். ஏனையவர்களால் அதனைக் கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்க முடியவில்லை.

தமிழ்க் கட்சிகளும் தலைமைகளும் சாதியவாதத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியத்தை தமக்கேற்றாற்போல பிரிக்கின்றார்கள். மேட்டுக்குடி அரசியலும் தான் தமிழ்த் தேசியத்தை துண்டாடுகின்றது. மதவாதம் சமயங்களின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றது. இந்து - கிறிஸ்தவம் - இஸ்லாம் - பௌத்தம் என்கிற அடிப்படையில் திட்டமிட்டு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றனர்.

மதவாதம், சாதியவாதம் என்பன அதிகமாக யாழ்ப்பாணத்தில் பார்க்கப்படுகின்றது. அங்குதான் மக்களுக்கிடையில் பிரிவினைகள் தீவிரம் பெற்றுள்ளது. இதனை அரசியல்வாதிகள் நீரூற்றி தமக்கு ஏற்றாற்போல வளர்க்கின்றார்கள். நான் பெரியவன், நீ சிறியவன் என்கிற பாகுபாடுகள் வருகின்றபோது தேசியத்தை அதாவது தமிழ்த்தேசியம் கட்டியெழுப்பப்படுவதில்லை. ஒரு தாழ்த்தப்பட்ட நபரின் கீழ் நான் செயற்படுவதா என்கிற கோட்பாட்டுடன் தமிழரசுக் கட்சி செயற்பட்டு வருகின்றது. 16 தலைவர்கள் பதவி வகித்த கட்சி இன்று 17வது தலைவர் தெரிவு வரை வந்தும் பிரச்சினைகள் பூதாகரமாக வெடித்துள்ளது. இதற்குள்ளும் சாதியப் பிரச்சினைகள் தலையெடுத்துள்ளன. இன்று இந்த தமிழ்க் கட்சிகள் எங்கு வந்து நிற்கின்றன எனப் பார்க்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் சாதிப் பாகுபாடு பார்க்கக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்கள். சாதிப் பாகுபாடு குறைக்கப்பட்டிருந்தது. சாதி விட்டு சாதி திருமணம் செய்கின்ற வழக்கம் இருந்தது. மீறி சாதிப்பாகுபாடு பார்த்தவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்கள். கட்டுப்படுத்தி வைத்திருந்தபோதிலும் விடுதலைப்புலிகளால் முற்றாக சாதிப் பாகுபாட்டினை நீக்க முடியவில்லை. இந்த சாதிப் பாகுபாட்டினால் யாழ்ப்பாணத்தின் பல ஆலயங்களுக்குள் எல்லோரும் செல்ல முடியாதுள்ளது. மலையக மக்களிடத்திலும் இந்த சாதியப் பாகுபாடுகள் காணப்படுகின்றது. மட்டக்களப்பிலும் சாதிப்பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கிறது. இந்த சாதியப் பாகுபாடுகளால் தான் இன்றைய வரையிலும் தமிழ் மக்களை ஒன்றிணைக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

ஆயுதக்கட்சிகள் இந்த சாதியப் பாகுபாட்டினை பெரிதாகக் கடைப்பிடிப்பதில்லை என்றாலும் அவரவர்கள் தங்கள் தங்களுடைய சாதிகளுக்குள் திருமணத்தை முடித்துக்கொள்கின்ற நிலைமை காணப்படுகின்றது. அது அவரவர்களுடைய உரிமையாகும். சுயவிருப்பமாகும். ஆனால் அஹிம்சை மற்றும் ஆயுத வழியில் போராடுகின்றவர்களும் சாதி மத பேதங்களைப் பார்த்துக்கொண்டிருந்தால் தமிழ்த்தேசியம் தோற்றுவிடும்.

இன்று தமிழ்த் தேசியத்தைப் பற்றி பேசுகிறார்கள். தமிழ்த்தேசியம் தோற்பதற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து தீர்ப்பதன் மூலம் அதனூடாகப் பயணிக்கின்ற போக்கு இன்னமும் வரவில்லை. தமிழரசுக் கட்சி பிளவடைவதற்கு மிக முக்கியமான காரணம் சாதியப் பிரச்சினை. ஒரு தாழ்த்தப்பட்டவன் தாழ்த்தப்பட்ட சாதியில் இருந்து வந்தவன் எம்மை ஆள்வதா? எமக்குத் தலைமை தாங்குவதா? கட்சிக்குத் தலைமை தாங்குவதா? என்கிற ரீதியிலான பல பிரச்சினைகள் வெளியில் சொல்லப்படாமல் இருக்கிறது. இவர்களால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இவர்கள் கூறுகின்றவற்றைக் கேட்டுக்கொண்டு செயற்படவேண்டும். சுயமாக இவர்கள் எதனையும் செய்ய முடியாது. இவர்களாலும் மாற்றங்களைக் கொண்டுவரமுடியாது. இந்தச் சாதியப் பாகுபாட்டால் என்ன பயன் இருக்கிறது? இதனை மாற்றியமைக்க வேண்டியது அரசியல்வாதிகளின், மக்களின் கடமை.

இன்றும் வடக்கு கிழக்கு மக்களை, மலையக மக்களை சாதிய அடிப்படையில் பிரித்து குறிப்பிட்ட ஒரு பெயரை வைத்து பேசுவதை காணமுடிகிறது. இந்த சாதியவாதத்தை தொடர்ந்தும் வளர்த்துச்செல்வதனால் தமிழ்த் தேசியம் அழியக்கூடிய ஆபத்தினை நோக்கிச் செல்கிறது. விடுதலைப்புலிகள் சுமார் 30 ஆண்டுகளாக வடக்கு மற்றும் கிழக்கில் பல கட்டமைப்புக்களை உருவாக்கி கட்டுக்கோப்புடன் மக்களை வழிநடத்தினார்கள். தமிழின அரசியலை முன்னெடுத்துச் சென்றார்கள். கடல், வான், தரை எனவும் வங்கிக் கட்டமைப்புக்களையும் சீராக வைத்திருந்தார்கள். கட்டுக்கோப்பான ஒரு சமூகமாக வளர்ந்த மக்களையும், விடுதலைப்புலிகள் அமைப்பையும் பூகோள அரசியல் பிரித்தது, சிதறடித்தது. பேச்சுவார்த்தைகளின் மூலமாக யுத்தம் முடிவுக்கு வந்தது. இன்று தமிழ்க் கட்சிகளும் பிரிந்திருக்கிறார்கள். சாதிவாதப் பிரச்சினையால் ஒன்றிணைய முடியாமல் இருக்கிறார்கள் என்பது கவலைக்குரிய விடயம்.

இன்றைய நிலையில் இந்த சாதியப் பாகுபாடுகள், மேட்டுக்குடி அரசியலை இல்லாதொழிப்பதற்கான வேலைத்திட்டங்களில் நாம் முழுமையாக ஈடுபடவேண்டும். சாதியவாதம் எமக்குத் தேவையில்லை. சாதியவாதம் வளர்க்கப்பட்டால் தமிழினம் முற்றாக அழியும். சாதிப்பாகுபாடுகளால் நன்மை ஏற்படாது. இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தான் உருவாகும். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் அவர்களைப் பொறுத்தவரையில், அவருடைய கட்சிக்குள் கூட பதவிகளில் இருப்பவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தினைச்சேர்ந்தவர்கள்தான். அவர்களுக்குக் கிடைத்த தேசியப் பட்டியலையும் யாழ்ப்பாணத்திற்கே வழங்கியுள்ளார்கள். ஆக தாங்கள் சார்ந்தவர்களுக்குத் தான் வழங்க வேண்டும் என்பதில் கட்சியின் தலைவர் கவனமாக உள்ளார். தேசியப் பட்டியலை அவர்கள் கிழக்கிற்கு வழங்கவில்லை.

தமிழ்க் கட்சிகள் மாறி மாறி இன்று துரோகிப் பட்டங்களை சூட்டிக்கொள்கின்றார்கள். இவையெல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் சாதியப் பிரச்சினைகளை கட்சிக்குள் தலைதூக்கவிட்டதுதான். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கும் கிழக்கும் இருந்தபோது ஓரளவேனும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்கள். ஆனால் இன்று சாதியவாதம் தலைவிரித்தாடுகின்றது. யுத்த காலத்திலும் சாதியவாதம் நலிவடைந்திருந்தது. சாதி குறைந்தவர்கள், சாதியில் கூடியவர்கள் என்கிற நிலை தொடர்கின்றது. மதமாற்றங்களுக்கு இந்த சாதியப் பாகுபாடுகளும் காரணமாக அமைகின்றது. மறுபக்கத்தில் மதவாதப் பிரச்சினைகள். தேர்தல் வருகின்றபோது பெரும்பாலும் மதவாதம் தலையெடுக்கின்றது. இதனால் ஆசனங்கள் பிரிந்துசெல்கின்ற போக்கும் காணப்படுகின்றது. ஆனால் ஆசனங்கள் செல்வதை தவறு என்று கூறமுடியாது. போராட்டங்கள் தோல்வியடைய பல காரணங்கள் இருந்தாலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு அரசியல் கட்டமைப்பை உருவாக்கியே சென்றுள்ளார். அதனை இன்றுள்ள தமிழ்த் தலைவர்கள் சீரழித்துள்ளனர்.

இன்றைய சூழலில் அரசியல் செயற்பாடுகளில் சாதியப் பாகுபாடுகள் பார்ப்பது தோற்கடிக்கப்படவேண்டும் என்பது கட்டாயம். தமிழ்த் தேசியம் குறித்துப் பேசும் பல தமிழ் அரசியல்வாதிகள் இந்த சாதியவாதம் குறித்துப் பேச மறந்துவிட்டார்கள் அல்லது மறுத்துவிட்டார்கள். தமிழரசுக்கட்சி சின்னாபின்னமானதற்கும் அடிப்படைக் காரணம் சாதியவாதம் தான். ஆகவே இந்த சாதியவாதம், மதவாதங்களை இல்லாதொழிக்கும் நோக்கோடு தமிழ் அரசியல்வாதிகள் செயற்படவேண்டும்.

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

# தமிழ் மக்களும் தமிழ்க் கட்சிகளும்

தமிழினம் கையறுநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதற்கு முழுக் காரணம் தமிழ் மக்களை தமது ஏகபிரதிநிதிகள் என்று கூறி வாக்குக்கேட்டு வெற்றி பெற்று பதவிகளை அலங்கரித்துவந்த / வரும் தமிழ்ப் பிரதிநிதிகளே. விடுதலைப்புலிகளின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் மௌனிக்கப்பட்டு சுமார் 14 வருடங்களாகியுள்ள இச்சூழலில், வடக்கு கிழக்கினை தாயகமாகக் கொண்டு வாழ்ந்துவரும் தமிழினத்தின் இருப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

விடுதலை புலிகள் உள்நாட்டில் உயிர்ப்புடன் இருந்த காலப்பகுதியில் தமிழினம் நிம்மதியாக வாழ்ந்தது. கல்வியில், பொருளாதாரத்தில், கலாச்சாரத்தில், அரசியலில் என சகல துறைகளிலும் தமக்கான கட்டமைப்புக்களை உருவாக்கி தமிழ் மக்களை தலைநிமிர்ந்து வாழவைத்தவர்கள் அவர்கள். ஒரு மக்கள் இயக்கமாக கட்டமைக்கப்பட்ட கூட்டமாக தமிழினம் செயற்பட்டது. அவர்களை நம்பி தமிழ் மக்கள் செயற்பாடுகளை முன்னெடுத்தார்கள். தங்களுக்காக அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என நம்பினார்கள். எதிர்கால அரசியல் இருப்புக்காகவும் சர்வதேச ரீதியிலான வேலைத்திட்டங்களுக்காகவும் முரண்பாடுகளால் மோதல்களால் பிரிந்துகிடந்த ஏனைய ஆயுதக்கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு கட்டமைப்பினை உருவாக்கி 22 பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றம் அனுப்பி தமிழினம் பெரும்பலத்துடன் வலம்வந்த காலமும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

ஆனால், இன்று தமிழினம் யாரை நம்பி எதிர்காலத்தில் செயற்படுவது என்பது தெரியவில்லை. தமிழர் தாயகப் பகுதிகளில் இருப்புக்கே கேள்விக்குறி இருக்க, கட்டுப்பாடுகளுமின்றி ஒழுங்கான உறுதியான கொள்கைகளுமின்றி அரசியலைச் செய்துவரும் தமிழ் அரசியல்வாதிகளும், அரசுக்கு கைக்கூலிகளாகச் செயற்பட்டு வரும் அரசியல்வாதிகளையும், தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை அள்ளிவீசும் அரசியல்வாதிகளையும், நம்பி தமிழினம் இந்த நாட்டில் வாழத்தான் முடியுமா?

பல சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்த அனுபவித்துவரும் தமிழ் மக்களுக்கான நீதியை உள்நாட்டில் எதிர்பார்க்கவியலாத இந்த சூழலில், உட்கட்சி மோதல்களால் கருத்து முரண்பாடுகளால் துண்டாடப்பட்டுள்ள தமிழ்க் கட்சிகளால் அரசுக்கு எதிராக என்ன செய்ய முடியும்? தமிழ் மக்களுக்கான நீதியை இவர்களால் பெற்றுக்கொடுக்கக்கூடிய திராணி இவர்களிடம் இருக்கிறதா?

தமிழர் தேசம் தொடர் சிங்களவர்களின் ஆக்கிரமிப்பால் பறிபோய்க் கொண்டிருக்கிறது. முப்படைகளின் அட்டாகசம் வடக்கு மற்றும் கிழக்கில் அதிகரித்துள்ளது. நாட்டின் பாதுகாப்பு என்கிற பெயரில் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் அமுலில் இருந்து தமிழ் மக்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. தமிழரசுக் கட்சி என்றுமில்லாதவாறு தலைவரைத் தெரிவுசெய்து தேசிய மகாநாட்டினை நடத்தக்கூட முடியாமல் திண்டாடுகின்றது. ஏனைய தமிழ்க் கட்சிகள் வீரவசனம் பேசிக்கொண்டு காலத்தை கழிக்கிறார்கள். சாந்தன் விடுதலை பெற்றும் உயிரற்ற உடலாக நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். உண்மையில் தமிழ்க் கட்சிகள் எம்மை என்ன செய்யக் காத்திருக்கிறார்கள் என்பதை இனியாவது பொதுவெளியில் சொல்லவேண்டும்.



# 32

## பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்



"இந்த காலத்தில் எந்த புத்தில் எந்த பாம்பு இருக்கும் என்று தெரியாது"

"கொஞ்ச நேரம் வாயை மூடு"

"நீங்க எந்த வேலையை உருப்படியா செய்திருக்கீங்க?"

"தம்பி ஏதும் இயக்காக்களோட தொடர்போ? பெரிசு ஏதும் கடத்திச்சோ?"

"பெரிசு இஞ்ச வறாது"

"நீ, எப்படி சொல்லுவ? போன மாதம் எங்கட நகைக்கட மாமாவ றோட்டில் வைச்சி சுட்டது யாரு? அவங்கள் தான்"

"எனக்கெண்டால், பயமா இருக்கு"

"இப்படியே நின்றால், சரி வறாது. வா மெது மெதுவாக கடற்கரை வீதியால் நடந்துபோவம். ஆக்கள் எல்லாம் போயிற்றாங்க. நாங்க இரண்டு பேரும் பொழுது சாயேக்க இஞ்ச நின்றா ஆமிக்கும் சீயடிக்கும் டவுட் வரும்"

ஆலயத்தின் முன் வாசலுக்கு சற்று தொலைவில் சாத்தை தினமும் ஊடறுத்து வேகமாக செல்லும் மோட்டார் வண்டி தனிமையில் நிற்கின்றது. அதன் அருகில் பூனைக்குட்டியொன்று தனிமையில் நின்றவாறு 'மீயோவ், மீயோவ், மீயோவ்...' - எதையோ தேடி அலைகின்றது. செக்கல் வானத்தில் பருந்து கூட்டங்கள் கூடுகள் நோக்கி பறக்கின்றன. சாலையோரத்தில் ஒற்றை நித்தியகலியாணி செடியில் பூத்து குலுங்கும்பூக்களில் உள்ள ஐந்து இதழ்களும் ஐந்து நிலங்களையும் பற்றி மௌன பாஷை பேசுகின்றன. காட்டு மல்லிகை என்னும் புனைபெயரில்.

இறுக கட்டப்பட்ட கண்கள் மெதுவாக கழட்டப்பட்டது. கண்களைக் கசக்கியவாறு சாத், இரு நபர்களின் பக்கமும் தனது பார்வையைத் திருப்பினான்.

"டேய் எங்கட பக்கம் திரும்பின பொணமாகத்தான் வெளியில் போவாய். நாங்க கேக்கிற கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு. வேற ஒன்றும் கதைக்காட்டி பத்து நிமிஷத்தில் கடற்கரையில் கொண்டு போய் விட்டுருவம். இல்லாட்டி..." - வாயிலின் இருள் பக்கம் சென்றான்.

சிறிய வயது முதல் விமானத் தாக்குதல், எரிகணைத் தாக்குதல் - பழகிப்போன சாத் இப்பொழுது அவன் ஆலயத்துக்குள் எங்கோ ஓர் இடத்தில் பதுங்கு குழிக்குள் இருப்பதை உணர்ந்துகொண்டான். கைத்துப்பாக்கியை பொலித்தின் பையில் சுற்றி வைத்திருக்கும் சப்தமும் மேலும் அதை அவனுக்கு உறுதிப்படுத்தியது.

"உன்ர பேர், ஊர் - எங்களுக்குத் தெரியும். நீ எப்படி ஆளு தெரியும். நீ என்னமோ கடிதம் நண்பர்களுக்கிட்ட காட்டினாயாம்?. நீ அவங்கள் ஆளா?" - மற்றவன், கைத்துப்பாக்கியை சாத்தின் பின் பிடரியின் பக்கம் நீட்டியவாறு கூறினான்.

சாத், அவனை யார் கடத்தியிருக்கிறார்கள்? என்னத்துக்கு கடத்தியிருக்கிறார்கள்? - ஊகித்துக் கொண்டான். கேட்ட, கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல தன்னைத்தயார்படுத்திக்கொண்டான்.

"வவுனியாவில் வைத்து, யாரோ தெரியாதவர் சொன்னதால், சென்று வாங்கிய கடிதம்"

"பொய் சொல்ல வேண்டாம்"

"பொய் சொல்லவில்லை உண்மையாகத்தான்"

"அப்படியென்றால், உனக்கு நெத்திலி நெப்போலியனைத் தெரியுமா?" - தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒரு அடிவருடியின் புனை பெயரைக் கேட்டான்.

சிறிது நேரம் சிந்தித்த சாத், "ஓம் தெரியும்"

"அவனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு"

"வரலாறு பாடப்புத்தகத்தில் 'டீச்சர்' சிறந்த போர் வீரனென்று படிச்சி தந்திருக்கா?"

"டேய், நான் அந்த நெப்போலியைக் கேட்கவில்லை இஞ்ச உள்ள நெப்போலியைத் தான் கேட்டேன்"

இஞ்ச அப்படி யாரையும் எனக்குத் தெரியாது"

"டேய் நடிக்காதை, அப்ப உனக்குத் தெரியாது?" - அதட்டல் தொனியில் கேட்டான்.

"அண்ணன், எனக்கு ஒருவரையும் தெரியாது. வீட்டுக் கஷ்டத்தில் உதவி கேட்கப்போன இடத்தில் அந்த கடிதத்தைத் தந்தாங்க. அதைவிட வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது"

"உண்மையா தெரியாது?"

"சத்தியமா தெரியாது"

"கடிதத்தில் எங்கட ஆள் - இருந்திச்சாம்"

"அவங்கள் அப்பிடி எழுதுனதுக்கு நான் என்ன செய்றது?"

"தமிழ் மக்கள் இந்த நாட்டில் என்ன செய்தாலும் எங்கட தலைமையில்தான் செய்ய வேண்டும்? எது செய்தாலும் எங்களுக்குத் தெரிய வேண்டும்? - எங்கட தலைவரிண்ட கட்டளை. இல்லாட்டி அவருக்கு துரோகி பட்டத்தோட நெத்தியில் பொட்டுத்தான்"

"உங்களுக்கு என்ன தெரியோனும்?. நான் படிக்க வந்தனான் துரோகியும் இல்ல" உங்களுக்குத் தெரியாமல் ஒன்றும் செய்யவுமில்லை"

"அப்படி வழிக்கு வா. நாங்க, உன்னை விசாரிச்சு, யாருக்கிட்டையும் சொல்லக் கூடாது. உன்னைப் பாக்க பாவமா இருக்கு. இல்லாட்டி தெரியுந்தானே றோட்டடியில் கண்கட்டி பிணமாகத்தான் கிடப்பாய்"

அவன் அவ்வாறு கூறியதும் அந்த நாள் இடையிடையே சாத்தின் முன் தோன்றி மறைகின்றது. அன்று வைகறைப் பொழுதில் அமைதி காக்கின்றது" குயில்கள் கூவுகின்றன" ஆங்காங்கே சேவல்கள் கூவுகின்றன" இடையிடையே காகங்கரையும் ஒலி காதுகளில் ஒலிக்கின்றது. கிழக்கு வானம் மெதுவாக மெதுமெதுவாக சிரிக்கின்றது. வீதியோரம் அசைபோட்டுக்கொண்டிருக்கும் கட்டாக்காலி மாடுகள் படுத்திருந்தவாறு சாணத்தைப் போடுகின்றன. இவ்வாறு இயற்கை செயற்பாடுகள் வழமைபோல் இருக்க, சாத் பிரத்தியேக வகுப்பை முடித்துக்கொண்டு, அடுத்த பிரத்தியேக வகுப்பு எடுக்க சென்றான். (உயர்தரம் எழுதி பெறுபேறு வரும் வரை கை செலவுக்கு கற்பித்தலில் ஈடுபட்டான்)

பிரதான வீதியை விட்டு குறுக்கு வீதிக்குள் இறங்குகின்றான். வீதியின் வலப்பக்கக்கரையில் இரண்டு கைகளும் பின்னால், கட்டப்பட்டு கண்கள் கறுத்த துணியால் இறுகக் கட்டப்பட்டு, நெற்றில் திலகம் இட்டது போல இரத்தம் ஒழுக, இருபத்தைந்து மதிக்கத்தக்க இளைஞன் பரிதாபமாக பிணமாக கிடந்தான். துவிச்சக்கர வண்டியில் சென்ற சாத்தை நிலை தடுமாற வைத்தது. இருந்தும் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு, அன்றைய வகுப்பை நிறுத்திவிட்டு வீட்டுக்குச் சென்றான். தந்தைக்கு நடந்த விடயத்தைக் கூறி, மன ஆறுதல் அடைந்தான். தந்தையும் யார் பெற்ற பிள்ளையோ, இப்படி அப்பாவிகள் எத்தனை பேர் வாழவேண்டிய வயதில். நீ போய் குளிச்சுட்டு வா என்று அவனுக்கு சமாதானம் கூறினார்.

காட்டிக்கொடுத்துப் பணம் சம்பாதிக்கும் மனிதர்கள் பலர் நடமாடிய போதும், அவர்களை உலகம் கண்டுகொள்ளவில்லை. தமிழர் சிலர் சிங்களவருக்கும் சிங்களவர் சிலர் தமிழருக்கும் முஸ்லிம் சிலர் இருவருக்கும் அடிவருடிகளாகவும் தமிழர்களில் மூன்று வகையினரை இனம் காணலாம். ஒன்று மற்றவரைக் குறைகண்டு, மற்றவர் போராட்டத்தில் குளிர்காய்வது. இரண்டு பொது நலம் என்றுகாலம் காலமாக கூட்டம் சேர்த்து நாடகம் நடித்து பணமும் புகழும் தேடுதல். மூன்று புத்திஜீவிகளாக தங்களைக் காட்டிக்கொண்டு பாமர மக்களை மூளைச் சலவை செய்து ஏமாற்றி, இனவாதம் கதைத்தல். இவ்வாறானவர்கள் வெளிப்படையாக நடமாடும் போது, அப்பாவிகள் பலரைப் புலனாய்வுத்துறையானது துன்புறுத்துவது வேதனைக்கு உரிய விடயமாக தோன்றும்.

"நீ எங்களுக்கு எதிராக கூட்டம் சேர்க்கிறாயாம்"

"என்ன கூட்டம்?"

"ஆக்கள் கூட்டம்?"

"ஏன்?"

"ஏனா?, எங்கட போராட்டத்தை அழிக்கத்தான்"

"எனக்கு ஏன் அண்ணன் இந்த வேலை? சாப்பாட்டுக்கும் படிக்கிறதுக்கும் ஐஞ்சு பத்து தேடுற என்னைப் போட்டு இந்த பாடு படுத்துறீங்க"

"சரி, சரி, உன்னை சந்தேகத்தில்தான் பிடிச்சிக்கொண்டு வந்தோம். இனி கண்டவங்களுக்கிட்டையெல்லாம் கடிதம் வாங்குற வேலை வைச்சிருக்கக்கூடாது."

"ஓம் அண்ணா"


"நீ வந்தவங்களிட்ட கொண்டு போய் விடுவம், யாருக்கிட்டையும் வாய் தொறக்கக் கூடாது"

கண்களை இரண்டு கைகளாலும் கசக்கியவாறு சாத் கண்களைத் திறந்தான். கடற்கரை வீதியில் அவன் கண்முன் காட்சியளித்தது நித்தியக் கல்யாணி பூக்களே. கடற்கரை வீதியில் வேகமாக இருவரை சுமந்த வண்ணம் மோட்டார் வண்டி வழமைபோல சாத்தை ஊடறுத்துச் சென்றது. இப்போது சாத் தன்னைச் சுற்றி ஏதோ நடக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டான்.

தனிமையில் கடற்கரை வீதியில் நின்றான், சாத். கடத்தப்பட்டு, விசாரணைக்குப் பின்னர் சந்தேக பேர் வழியாக விடுதலை செய்யப்பட்டது அவனுக்கு இன்னும் அநுபவத்தைக் கொடுத்தது. விழுந்தால் உடனே எழ வேண்டும்" ஒரு திட்டம் பிழையாகி விட்டால், மனம் சளைக்காமல் அடுத்த திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் - தத்துவத்தை பூத்துக் குலுங்கிய நித்தியக்கல்யாணிப் பூக்களும் உதிர்ந்த சில வீக்களும் உணர்த்தின நயனதாரா என்னும் புனைபெயரில்.

# நீதிமன்றம் சென்றாலும் தமிழரசுக் கட்சி ஒரு இணக்கப்பாட்டுடன் பயணிக்கும் – முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்



தமிழரசுக் கட்சி இந்த ஆண்டு பவளவிழா ஆண்டில் காலடிவைத்திருக்கிறது. சரியாக டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இலங்கை தமிழரசுக் கட்சி75ஆவது ஆண்டு பவளவிழாவினைக் கொண்டாட இருக்கிறது. அந்தவகையில் தான் இந்த 17வது தேசிய மகாநாட்டினை முன்னிட்டு கடந்த ஜனவரி 21ஆம் திகதி கட்சியின் தலைவர் தெரிவு இடம்பெற்றது. அதுவும் என்றுமில்லாதவாறு தேர்தலின் மூலமாக தலைவர் தெரிவு இடம்பெற்றது. அதன் பின்னர் பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது. அதிலே ஒரு சிலரால் தெரிவுசெய்யப்பட்ட விடயங்கள் சரி, தவறு என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியிலே இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. யாழ்ப்பாண நீதிமன்றத்திலும் திருகோணமலை நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி இவ்வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்குகள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் உத்தியோகபூர்வமாக இல்லாதுவிட்டாலும் உத்தியோக பற்றற்ற முறையில் ஆலோசனைக் கூட்டமொன்று கிளிநொச்சியிலே இடம்பெற்றிருந்தது. அதில் நானும் கலந்துகொண்டிருந்தேன். அதில் இந்த வழக்கினை எவ்வாறு முன்கொண்டு செல்வது, ஏனென்றால் இதில் எதிரிகளாக 07 பேர் திருகோணமலையில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் 05 பேர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வழக்கினை எவ்வாறு முன்கொண்டு நடத்துவது சம்பந்தமாகவும் இந்த வழக்கினை முடிப்பதா அல்லது முன்கொண்டு நடத்திச்செல்வதா என்பது குறித்துமத்திய குழு ஒரு ஆலோசனையாகக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதில் பலரின் கருத்தின் படி இரண்டு முடிவுகள் எடுக்கப்பட்டது.

ஒரு முடிவு வழக்கு தாக்கல் செய்தவர்களுடன் அணுகி சமரசமாக அவர்களுடன் செல்வது என்பது முதலாவது கருத்து. அதற்காக அதில் ஒரு குழுவும் தீர்மானித்திருந்தோம். அந்தக் குழுவில் மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், தற்போதைய செயலாளர் சத்தியலிங்கம், மட்டக்களப்பு முன்னாள் மேயர் சரவணபவன், திருகோணமலையில் இருக்கக்கூடிய தற்போது பொதுச் செயலாளராக முன்மொழியப்பட்ட குகதாசன் இந்த நால்வரையும் நாங்கள் முன்மொழிந்திருந்தோம். இவர்களுடன் சி.வி.கே.சிவஞானம் அவர்களும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருந்தார்.

திருகோணமலையில் வழக்கினை தாக்கல் செய்த வர்களுடன் சமரசப் பேச்சுக்கள் இடம்பெற்றபோது, ஆரம்பத்தில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் நான் இதில் கலந்துகொள்ளவில்லை. சென்றவர்கள் கேட்ட விடயம் என்னவென்றால், 27ஆம் திகதி பொதுச்சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் இரண்டு திருத்தங்கள். ஒவ்வொரு வருடங்களாக குகதாசன் அவர்கள் முதல் வருகின்ற வருடமும், பின்னால் வருகின்ற ஒரு வருடம் ஸ்ரீநேசன் அவர்கள் பொதுச் செயலாளராக வருவதற்காக, ஸ்ரீநேசன் அவர்களை ஏற்கனவே வழங்கப்பட்ட உப பொருளாளர் பதவியினை மீளப்பெற்று அதற்குப் பதிலாக உப செயலாளர் என்கின்ற பதவியினை வழங்கப்படுகின்ற விடயமும், ஏற்கனவே 2019ஆம் ஆண்டில் இணக்கப்பாட்டுடனாக சம்பவம் ஒன்று நடைபெற்றதனால் தற்போதும் இதனை நீங்கள் அதேபோலச் செய்யலாம் தானே என்பதற்கிணங்க, இணக்கப்பாடுஅன்றைய பேச்சுவார்த்தையில் எட்டப்பட்டிருந்ததாக கலந்து கொண்டவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். இதில் உண்மை பொய் எனக்குத் தெரியாது. ஆனால் இணங்கியிருக்கிறார்கள் என்கிற விடயம் கூறப்பட்டிருக்கின்றது.

ஆனால் வழக்கு 29ஆம் திகதி நடைபெற முன்பு அந்த இணக்கப்பாட்டினை அவர்கள் ஏற்கவில்லை, அதில் நிபந்தனைகளைக் கூறியதாகவும் அதாவது 27ஆம் திகதி எடுத்த முடிவை முழுமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கின்ற கருத்தை 29ஆம் திகதி கூறவில்லை அதற்கு முன்பு ஆதரித்திருந்ததாகவும் வழக்கின் எதிரிகளாக இருக்கக்கூடியவர்கள் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களிடம் ஏதோ ஒரு விதத்தில் கூறியதாகவும் நான் அறிந்திருந்தேன்.

மத்திய குழுவில் எடுக்கப்பட்ட முடிவு முதலாவது இணக்கப்பாட்டுக்குச் செல்வது. இரண்டாவது உப விதிப்படி அந்த தெரிவு இடம்பெறவில்லை என்றுதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால், நாங்கள் அந்த உப விதிப்படி செய்வதாக நாங்கள் ஏற்றுக்கொண்டு மீளவும் அனைத்துத் தெரிவுகளையும் செய்வதாக அதில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

அதில் முக்கியமாக புதிதாக தலைவராக தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தெளிவாகக் கூறியிருந்தார். அதாவது, தனக்கு எந்தவித பதவி ஆசைகளும் இல்லை, மீளவும் அனைத்துத் தெரிவுகளையும் செய்வதற்கு தான் தயாராகவே இருக்கிறேன் எனத் தெரிவித்திருந்தார். தனக்கு பதவி முக்கியமில்லை கட்சி தான் முக்கியம் என அவர் அந்தக் கூட்டத்திலும் தெளிவாகக் கூறியிருந்தார்.

நீதிமன்றத்திற்கு சென்ற எமது சட்டத்தரணிகள் மூலமாக 07 பேர் எதிரிகளாக இருந்தபோதிலும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் அன்றைய தினம் நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்கவில்லை. திருகோண மலையின் வழக்காடி கூறுகின்ற விடயம் என்னவென்றால் 161 பேரை மொத்தக் கட்டமைப்பாகக் கொண்டு நிர்வாகத்தினை தெரிவுசெய்வதற்கு தாங்கள் தயார் என நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்கள். அதனை நீதிபதி அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார். ஆனால் இதிலொரு விடயம் 07 பேரில் 06 பேர் சமூகமளித்து இணக்கப்பாட்டிற்கு வந்தபோதிலும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களது கருத்தினைக் கேட்கவேண்டியுள்ளதன் காரணமாக அவருக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேபோல யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு சம்பந்தமாக, திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்ட அதே கட்சியின் ஒரே வழக்கு என்பதன் காரணத்தினால், ஏப்ரல் 25ஆம் திகதி விசாரணைகளின்றி வழக்கினை ஒத்திவைத்திருக்கிறார்கள். இதுதான் நடைபெற்ற இரண்டு மாவட்ட வழக்குகளின் முடிவாக இருக்கிறது.

எனினும் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்தவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்து நாங்கள் எதுவும் சிந்திக்கவில்லை. அது மத்திய குழுவில் கூடி எடுக்கப்படவேண்டிய ஒன்று. ஆனால் இவ்விடயம் குறித்து கடந்த மத்திய குழுவில் கூட நாங்கள் கலந்துரையாடவில்லை. நீதிமன்றத்தில் ஒரு வழக்கு முடியும் வரை அல்லது நடைமுறையில் இருக்கின்றபோது வழக்கு தாக்கல் செய்தவர்களை ஆராய்வதோ அல்லது அவர்களின் பின்னணியினை ஆராய்வதோ இப்பொழுது தேவையில்லை. இப்பொழுது இந்த வழக்கிலிருந்து தமிழரசுக் கட்சி எவ்வாறு வெளியில் வருவது என்பதுதான் முக்கியமானது. இந்த விடயத்தில் தான் நாங்கள் தமிழரசுக் கட்சியினர் ஒத்த கருத்தில் இருக்கிறோம். எதிர்காலங்களில் மத்திய குழு தான் இந்த விடயங்கள் குறித்து தீர்மானங்களை எடுக்க முடியும். நானோ, நீங்களோ இதுபற்றி கருத்துக்களைக் கூறி முடிவுகளை எடுக்க முடியாது என்பதுதான் எனது நிலைப்பாடு.

நிச்சயமாக இந்த தெரிவு விடயம் உப விதிகளின் படி செய்யப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வழக்கு தாக்கல் செய்யப்பட்டவர்களின் நோக்கமும் உப விதிகளின் படி இந்த தெரிவு இடம்பெறவில்லை என்பதுதான். ஏனென்றால் மேலதிகமாக 120 பேர் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். அதுவோரு தவறு என்பதைத்தான் அவர்கள் கூறியிருக்கிறார்கள். உபவிதியிலும் நாங்கள் பார்க்கின்றபோது அது இருக்கின்றது.

ஆனால் கட்சி ஆரம்பிக்கப்பட்டது 1949ஆம் ஆண்டு. இந்த உபவிதி தயாரிக்கப்பட்டது 1962ஆம் ஆண்டு. இந்த 1962ஆம்ஆண்டுக்குப்பிறகு16மகாநாடுகள் நடைபெற்றிருக்கிறது. இறுதியாக நான் நினைக்கிறேன் ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாற்றம் பெறுவதற்கு முன்பு 1973ஆம் ஆண்டு 12, 13வது மகாநாடு இடம்பெற்றிருக்கிறது. அந்த 1973ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏறக்குறைய 33 வருடங்களின் பின்னர் 2010 இல் தான் இந்த மகாநாடு நடைபெற்றுள்ளது. 2010 காலச்சூழல் என்பது அல்லது எவ்வாறான அச்சுறுத்தல் இருந்தது, எவ்வாறு கட்சியை நாங்கள் மீளக் கட்டமைக்கவேண்டும் என்கிற விடயங்களில் 2010க்குப் பிறகு 04 மகாநாடுகள் நடைபெற்றுள்ளது. இந்த நான்கு மகாநாட்டிற்கும் நான் சென்றிருக்கிறேன். நான் மத்திய குழுவின் உறுப்பினராக இருக்கின்றேன்.

நான் அறிந்ததன் படி, எனது அனுபவத்தின் படி 2010 ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டுவரை 04 மகாநாடுகள் நடைபெற்றுள்ளது. இந்த மகாநாடுகளில் உபவிதிகளின் படி உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவில்லை. ஏனென்றால் கட்சியை நாங்கள் கொண்டுசெல்லவேண்டும் என்ற காரணத்திற்காக பலர் அதில் பங்குபற்றியிருந்தார்கள்.

மட்டக்களப்பில் நடந்த மகாநாடாக இருக்கலாம் அல்லது யாழ்ப்பாணத்தில் நடந்த இரண்டு மகாநாடுகளாக இருக்கலாம். யாரும் வழக்கு தாக்கல் செய்யவும் இல்லை. தவறு என்று கூறவும் இல்லை. இப்பொழுது வழக்கு தாக்கல் செய்ததன் காரணமாகத்தான் தவறு என்கிற விடயத்தினை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலை கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்திற்கு செல்கின்றபோது நீதிமன்றத்தினை மதிக்கவேண்டிய பண்பு இருக்கவேண்டும் என்பது ஒரு விடயம். இரண்டாவது இவ்வாறான தவறுகளை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றபோது நாங்களும் மனசாட்சியின் படி அதனைத் திருத்தவேண்டியது கட்சியினுடைய பண்பாகும். அதனைத் திருத்தம் செய்வதற்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றோம். புதிய தலைவர் சிறீதரன் இவ்விடயத்தினை ஏற்றிருக்கின்றார். பழைய தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் ஏற்றிருக்கின்றார். மத்திய குழுவிலுள்ளவர்கள் ஏற்றிருக்கின்றார்கள். ஏற்றுக்கொண்ட விடயத்தினை நீதிமன்றத்திலும் கூறியிருக்கின்றார்கள்.

ஆகவே நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும்வரைக்கும் நாங்கள் காத்திருக்கின்றோம். ஒத்திவைக்கப்பட்ட 17வது தேசிய மகாநாடு எந்தவகையில் நடக்கும் என்பதை எதிர்வருகின்ற ஏப்ரல் 15ஆம் திகதிக்குப் பின்னர் தான் அதற்கான இறுதி முடிவினை எடுக்கலாம் என நான் நினைக்கின்றேன்.

# கோட்டாபய விமர்சிக்கப்பட வேண்டியவரா? மக்களால் மதிக்கப்பட வேண்டியவரா?

இலங்கையில் இன்று உள்நாட்டு அரசியல் என்று ஒன்று இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இலங்கையின் உள்நாட்டு அரசியல் அனைத்துமே சர்வதேச நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பூகோள அரசியலுடன் தொடர்பு கொண்டிருப்பதை வைத்து இந்த கருத்தை பதிவிடுகிறேன். சாதாரண கட்சிகள் முதல் பெரிய அரசியல் கட்சிகள் வரை அனைத்துக் கட்சிகளுமே, சர்வதேசத்தின் ஏதோ ஒரு சக்தியுடன் இணைந்தே செயற்படுகின்றன என்பதற்காகவே இதனை கூறுகிறேன். சில வேளைகளில் சுயாதீனத்துடன் சர்வதேச தொடர்புகள் இல்லாத கட்சிகள் இருந்தாலும் அவை, இலங்கையின் அரசியலில் முன்னிலைக் கட்சிகளாக இருப்பதில்லை, அல்லது இருக்க முடியாது என்பதே யதார்த்தமாகும்.

இதற்கு மாற்றுக்கருத்தாக இன்றைய பூகோள அரசியலில் சர்வதேசத்தின் உதவியில்லாமல், எவருக்கும் தனித்து இயங்க முடியாது என்று யாரும் கருத்தியலை முன்வைக்கலாம். எனினும் எனது கருத்து அதுவல்ல. சர்வதேசத்தின் ஏதோ ஒரு நிகழ்ச்சித்திட்டத்துக்காக இலங்கையில் செயற்படுகின்ற கட்சி அரசியலையே நான் முன்வைக்கிறேன். இதற்கு உதாரணங்களாக மஹிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன சீனச் சார்பு கட்சியாகவே பார்க்கப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரையில் அது அமெரிக்க சார்பு கட்சியாகவே பார்க்கப்படுகிறது. அதேநேரம் இன்று அது இந்தியா சார்பான கட்சியாகவும் பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மூன்றாவது அரசியல் கட்சியாக நோக்கப்படும் ஜேவிபி ஆரம்பத்தில் இருந்து சீனாவின் சார்பு கட்சியாகவே பார்க்கப்படுகிறது. எனினும் இன்று அந்தக் கட்சியின் போக்கு சர்வதேசத்தை மையப்படுத்திய அல்லது நெகிழ்வுத்தன்மையை கொண்டது என்று தற்போதைய தலைமை கூறுவதால், சீனாவின் சார்பு கட்சியாக மாத்திரம் அது செயற்படுவதில் பிரச்சினை எழுந்துள்ளது என்றே கூறவேண்டும். இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமான பயணத்தை அடுத்து, அண்மைக்காலத்தில் இருந்து அந்தக்கட்சி இந்திய எதிர்ப்பு கொள்கையிலும் நெகிழ்வுப்போக்கை கடைப்பிடிக்கவேண்டிய நிலைக்கு வந்துள்ளது என்பதை கூறமுடியும்.

தமிழ்க்கட்சிகளை பொறுத்தவரை அதில் பெரும்பாலானவை, விரும்பியோ, விரும்பாமலோ இந்தியாவுக்கு சார்பான கட்சிகளாகவும், சீனாவுக்கு எதிரான கட்சிகளாகவும் பார்க்கப்படுகின்றன. முஸ்லிம் கட்சிகள் பெரும்பாலும் பாகிஸ்தான் மற்றும் அரபு நாடுகளுக்கு சார்பான கட்சிகளாக நோக்கப்படுகின்றன. இந்த செல்வாக்குகளை மையப்படுத்தியே சர்வதேச நாடுகள், இலங்கையில் காலூண்றி தமது சொந்த நலனுக்கான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றன.

இலங்கையின் அரசியலில் ஆட்சி செய்த அரசாங்கங்களினால் இதுவரை நாட்டுக்கென்று பொதுவான தேசியக் கொள்கைகளை வகுக்க முடியாமல் போனமையே இதற்கு முக்கிய காரணமாக கூறமுடியும். இலங்கையில் ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் எப்போதும், தமது நாடு அணிசேராக்கொள்கையை கடைப்பிடிப்பதாக கூறிவருகின்றன. எனினும் வெளிப்படையாக அவை விரும்பியோ, விரும்பாமலோ அணிசேரும் கொள்கைக்குள் தள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் உற்பத்தி சார்ந்த பொருளாதாரம் மேம்படாமையும், ஊக்குவிக்கப்படாமையும் இதற்கான முக்கிய குறைபாடுகளாகும். இதனால் இலங்கையின் இறையாண்மைக்கும் குந்தகம் ஏற்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது.

அந்த வகையில் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் யார் குற்றம் கூறினாலும், இயற்கை விவசாயம் என்ற தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பாராட்ட வேண்டும். அவர் எடுத்த முயற்சி சிறந்தது என்றபோதும், அதற்காக எடுத்துக்கொண்ட காலம் மிகக்குறுகியது என்பதே அவர் செய்த பாரிய தவறாக அமைந்துவிட்டது. மறுபுறத்தில் இலங்கை மக்களுக்கு நீண்டகாலமாக புரியாமல் இருந்த, தமது அரசியல்வாதிகள் தொடர்பிலும், இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பிலும் புரிதலை ஏற்படுத்தியமைக்காகவும் அவரை பாராட்டவேண்டும். இதன் மூலமே இலங்கை எவ்வளவு கடனைப் பெற்றுள்ளது? மத்திய வங்கியில் அன்னிய செலாவணியின் நிலை என்ன? அத்துடன் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் என்பன வெளியாகின.

கடந்த 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து இலங்கையின் அரசாங்கங்கள் தங்களுக்கு உரிய ஒரு பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தன. எனினும் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சி நடத்திய சிறிமாவோ பண்டாரநாயக்க, சுயப்பொருளாதாரத்திட்டத்தை முன்னெடுத்தார். எனினும் அதுவும் தோல்வி கண்டது. அந்தக் கொள்கையை மக்கள் பட்டினிக்கொள்கை என்று உணர்ந்தமையே தோல்விக்கான காரணமாக அமைந்தது. இதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி, இறக்குமதிப் பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியதை அடுத்து, மக்கள் அதில் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். அதேநேரம் அந்தக் கொள்கை நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை பாரியளவில் பாதித்தது.

இந்த நிலையிலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச கொண்டு வந்த இயற்கை விவசாயக் கொள்கை அமைந்தது. எனினும் முன்னாயத்தங்கள் இன்றி அவசரமாக அவர் எடுத்த முடிவே, அந்த கொள்கை தோல்வியடைய காரணம் என்பதை முன்னரே கூறிவிட்டேன். எனினும் இதுவரை காலமும் இலங்கை அரசாங்கங்களினால் கடன் வாங்கும் பொருளாதாரம் மூலம் இலங்கை மக்களுக்கு மறைக்கப்பட்டு வந்த திவால் அல்லது வங்குரோத்து நிலை, கோட்டாபயவின் இந்த தோல்வியுடனேயே வெளிப்பட்டது.

எனவே இலங்கையின் வங்குரோத்து நிலைக்கு கோட்டாபய முழுமைப் பொறுப்பாளர் அல்லர். முன்னைய ஆட்சியாளர்கள் செய்து வந்த மறைப்பு அரசியலை தமது தோல்வி செயற்பாட்டின் மூலம் வெளிக்கொணர்ந்தவர் என்ற அடிப்படையில் அவர் இலங்கை மக்களால் போற்றப்படவேண்டியவர். ஆனால் இன்று அவரே நாட்டின் திவால் நிலைக்கு முழுமைக்காரணம் என்ற படுகுழிக்குள் தள்ளப்பட்டு, இலங்கையின் அரசியல் வரலாற்றில் கசப்பான இடத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தற்போது இலங்கைத் தேசம், உற்பத்தி பொருளாதாரம் இன்றியும் அன்னிய செலாவணி பற்றாக்குறையுடன் இறக்குமதி பொருளாதாரம் தளம்பியுள்ள நிலையிலும், இரண்டும் கெட்டான் நிலையில் நகர்ந்துகொண்டிருக்கிறது. சரி, நடைமுறையில் இலங்கை அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது என்று பார்த்தால், உள்நாட்டு தேர்தல் அரசியல் மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்ற இரண்டு பக்கங்களிலும் கால்களை வைத்துக்கொண்டு கள்ளப்பார்வையுடனும் ஏமாற்றும் சிந்தனையுடனும் காலத்தை நகர்த்திக்கொண்டிருக்கிறது.



ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்தின் இறுக்கமான பொருளாதார கொள்கைகள் காரணமாக இலங்கை மக்கள் பாரிய பொருளாதார கஸ்டங்களுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

ஆய்வுகளின் படி சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய நிபந்தனைகளை நிறைவேற்றாமலேயே இலங்கை மக்கள் பாரிய கஸ்டங்களுக்குள் உழன்று கொண்டிருக்கின்றனர். இன்னும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றும் பட்சத்தில் மக்கள் மீது பாரிய சுமைகளை சுமத்தவேண்டியேற்படும் என்று இலங்கை அரசாங்கம் அச்சம் கொண்டிருக்கிறது. இந்த அச்சம் விரைவில் வரும் தேர்தலை மையப்படுத்திய அச்சமாகவே பார்க்கப்படுகிறது.

ஆரம்பத்தில் அதிஸ்டம் மூலம் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமக்கு கட்சி அரசியல் இல்லையென்றும் நாட்டை முன்னேற்றுவதே முக்கியம் என்றும் கூறிவந்தார். இதனடிப்படையில் பொதுமக்களின் பொருளாதாரக் கஸ்டங்கள் அவருக்கு எவ்வித அரசியல் தாக்கங்களையும் ஏற்படுத்தப்போவதில்லை என்று கருதியே அவர் அதனை கூறிவந்தார். ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை இன்னமும் தக்கவைக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்த பின்னர், அவருக்கு தேர்தல் தொடர்பான அச்சம் மேலிட்டுள்ளது. இதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் நாட்டின் பொதுத்துறையில் தனியார் முதலீடுகள் என்ற திட்டங்களை தாமதப்படுத்தி வருகிறார் என்ற குற்றச்சாட்டும் எழுப்பப்பட்டு வருகிறது.

இது, இலங்கையில் மாத்திரமல்ல. எந்தவொரு நாட்டிலும் அரசியல்வாதிகள் எதிர்பார்க்காத இக்கட்டான சூழ்நிலை என்பதை அனைவரும் அறிவார்கள். தமது கட்சி ஏற்கனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சி, இந்த நிலையில் தமது ஆட்சியை தக்கவைக்கவேண்டுமானால், மக்கள் அதிருப்தியுடன் பார்க்கும் மஹிந்த ராஜபக்சவின் கட்சியுடனேயே சேர்ந்து பயணிக்கவேண்டும் என்ற கட்டாயத்தில் ரணில் விக்கிரமசிங்க சிக்குண்டுள்ளார். எனினும் அதனை பகிரங்கமாக சொல்லும் அளவுக்கு மஹிந்த ராஜபக்சவுக்கான செல்வாக்கு மக்கள் மத்தியில் இல்லையென்பது அவரின் துரதிஸ்டவசமே. எனவேதான் மஹிந்த ராஜபக்சவின் முன்னைய ஆட்சிமுறைக்கான பொறுப்பை பகிரங்கமாக ஏற்காமலும், அந்தக்கட்சியை விமர்சிப்பதை போன்ற வெளித்தோற்றத்தையும், உள்ளக அளவில் அந்தக் கட்சியுடன் சிறந்த புரிந்துணர்வையும் ரணில் விக்கிரமசிங்க கொண்டுள்ளார்.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க தனித்து பாரிய கூட்டணிக்குள் போட்டியிடப்போவதாகவும், மஹிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிடப்போவதாகவும் கூறப்படுவது நாடகமே என்பதை மக்கள் சொல்லாமல் சொல்லி வருகின்றனர். ஏனெனில் மஹிந்த ராஜபக்ச கட்சியினரின் அரசியல் நிலை தற்போது வாழ்வா? சாவா? போராட்டத்துக்கு உள்ளாகியுள்ளது. மக்கள் மத்தியில் சென்று தம்மை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதாக கூறுவதற்கு அந்தக்கட்சிக்கு தைரியம் இல்லை. ஆனாலும் அதன் விசுவாசிகள் மஹிந்தவை கைவிடாமல் இருந்து வருகின்றனர்.

அதேநேரம் எதிர்பார்க்காத பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கி, அவரை ஜனாதிபதியாக்கி, தம்மையும் அண்ணன் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொண்ட கோட்டாபய ராஜபக்சவுக்கு, ரணில் துரோகம் செய்யமாட்டார் என்றே பொதுஜன பெரமுன நம்புகிறது. எனவே பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் வெளியில் பகை, உள்ளுக்குள் நட்பு என்ற கொள்கையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்தோ அல்லது தனித்தோ ஆட்சியை தக்கவைப்பதற்கான அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் ஒரு நடவடிக்கையாகவே சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார சீர்திருத்தக்கொள்கைகளை தாமதித்து. மக்கள் மீதான சுமையை தேர்தல் வரையில் தள்ளிப்போடுவதாகும். உதாரணத்துக்கு டின் என்று சொல்லப்படுகின்ற 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வரிவிதிப்பு எண் திட்டம் தொடர்பில் இன்னும் அரசாங்கம் முன்னெடுப்புக்களை விரைவுபடுத்தவில்லை என்பதை குறிப்பிட்டுக்கூறலாம். மறுபுறத்தில் சஜித் பிரேமதாசவின் கட்சிக்கான செல்வாக்கு தளம்பாமல் இருப்பதாகவே கருதப்படுகிறது. எனினும் அவரின் தலைமைத்துவத்தில் அவ்வப்போது சில தளம்பல்கள் எட்டிப்பார்க்கின்றன. தற்போதைக்கு அந்தக்கட்சிக்கு ஜேவிபியின் தலைமையிலான தேசிய மக்கள் கட்சி, போட்டியாளராக உருவாகிக்கொண்டிருப்பது கலக்கத்தை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது.

||ஆம் பக்கம் பார்க்க...

**நெற்றிப்பொறியன்**

# சகோதரப் படுகொலையே தமிழீழக் கனவை சிதைத்தது



**ஈ.பி.டி.பி கட்சியின் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தினப்புயலுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

எனக்கு அனுபவம் இருக்கிறது. நான் வேறு எங்கும் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கமாகவிருக்கலாம். இந்திய அரசாங்கமாகவிருக்கலாம். தன்னுடைய நலனில் இருந்துகொண்டுதான் பிரச்சினையைப் பார்ப்பார்கள். நாங்கள் தவறுகளைச் செய்துவிட்டு மற்றைய நபர்கள் மீது குற்றம் சுமத்துவதில் எனக்கு உடன்பாடில்லை.

**கேள்வி : சகோதரப் படுகொலைகளை முதலில் கையாண்டது யார்?**
பதில் : பிரபாகரன்.

**கேள்வி : எவ்வாறு அப்படிக் கூறுகின்றீர்கள்?**

பதில் : வரலாறு அனைத்தும் இருக்கிறது. எங்கே எப்படி நடந்தது என்கிற விடயங்கள் இருக்கிறது. உள்ளுக்குள் முதலாவதாக தன்னுடைய ஆட்களை கொலை செய்ய ஆரம்பித்தது. பின்னர் ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனுசனை கடிக்கிறது போல பின்னர் மற்றைய ஆட்கள் மீதும் கைவைத்தது தான்.

நான் 1986 மே மாதம் வரை ஈ.பி.ஆர்.எல்.எப்க்கு பொறுப்பாகவிருந்த வரைக்கும் ஊர்க் கொலைக்கோ அல்லது வெளிக் கொலைகளுக்கோ இடம்கொடுக்கவில்லை. நான் அதற்கு உரிமை கோரலாம். 1986ஆம் ஆண்டு மே மாதம் வரைக்கும் தலைவராகவிருந்தாலும் இங்கு நான் தான் அதனை வழிநடத்தினேன். சரி பிழைக்கு நான் தான் பொறுப்பு. எனக்குத் தெரிய நடந்திருக்கலாம் தெரியாமல் நடந்திருக்கலாம். நான் அதற்கு தார்மீகப் பொறுப்பு எடுத்தேன். நாங்கள் மற்றைய இயக்கங்கள் நடந்தது போல நடந்திருந்தால் நான் தான் ஈ.பி.ஆர்.எல். எப்க்கு தலைவராகக் கூட இருந்திருக்கலாம். நான் தான் ஈ.பி.ஆர்.எல்.எப்பினுடைய தலைவர். எனக்கு ஆயுதங்கள் அனுப்புங்கள் என இந்தியாவுக்கு நான் கூறியிருக்கலாம். அவர்கள் அனுப்பியிருப்பார்கள். நான் இந்தியாவிற்குப் போனேன். சென்றதற்குக் காரணம் ஈ.பி. ஆர்.எல்.எப் இன் தலைமைகள், சக தோழர்கள் அனைவரும் இந்தியாவில் தான் இருந்தார்கள். அவர்களுடன் கதைத்து உள்வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது. ஆனால் நான் அங்கு செல்லவேண்டிய அவசியமில்லை. ஈ.பி. ஆர்.எல்.எப் முழுவதும் என்னுடைய நெறிப்படுத்தல், என்னுடைய வழிகாட்டல், என்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் தான் இருந்தது. அப்படியிருந்தும் நாங்கள் பேசுவதற்கும் செயற்பாட்டிற்கும் இடையில் வேறுபாடு இருக்கக்கூடாது. பேசுவதொன்று செய்வதொன்றாக இருக்கக்கூடாது என்கிற அடிப்படையில் நான் இந்தியாவுக்குப் போனேன். இதுவொரு காரணம்.

இரண்டாவது காரணம் பிரபாகரன் உள்ளடங்கலாக ஏனைய தமிழ் இயக்கங்களுடன் கலந்துரையாடி ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வருவது. நாட்டையும் மக்களையும் விடுவித்த பிறகு நீங்கள் உங்களுடைய கொள்கையை மக்களிடம் வையுங்கள் நாங்கள் எங்களுடைய கொள்கையை மக்களிடம் வைக்கிறோம். மக்கள் யாரைத் தெரிவுசெய்வார்களோ அவர்கள் ஆட்சி செய்யட்டும் என்று. எல்லாத் தலைமைகளும் அங்குதான் இருந்தனர்.

ஆனால் பிரபாகரனுடன் சந்திப்பொன்று ஏற்படுத்தப்பட்டது. பத்மநாபா தோழர் இறுதியில் வரமாட்டேன் எனக் கூறிவிட்டார். தலைவருக்கு தலைவர் என்கிற வகையில் பிரபாகரன் வராவிட்டால் இவர் வரப்போவதில்லை. அடையாறில் ஒரு பெரிய மேசை. அந்தப்பக்கம் பாலசிங்கம், யோகி, திலகர். இந்தப் பக்கம் நான், சுரேஸ் பிரேமச்சந்திரன், வரதராஜப்பெருமாள், கூட்டறிக்கைக்கு ஒருவர். அவர் பின்னாளில் வடக்கு கிழக்கு மாகாண சபையினது நிதிக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தவர். உரையாடிக்கொண்டிருந்தபோது அதாவது இவர்கள் பந்தெறிய அவர்கள், அவர்கள் பந்தெறிய இவர்கள் என கதைத்துக் கொண்டிருந்தனர். ஒரு 30 நிமிட உரையாடல் தொடர்ந்தது. நான் விரக்தியில் எழுந்து நின்று நீங்கள் இங்கு இரு தரப்பும் நன்றாக உணவு அருந்திவிட்டு சண்டையிடிப்பீர்கள். அங்கு அடிபட்டு உயிரிழப்பது சாதாரண மக்களது பிள்ளைகளும், பொது மக்களும் தான் பாதிக்கப்படுகின்றார்கள் என்று கூறியதுடன் அந்தப் பேச்சுவார்த்தை அத்துடன் முறிவடைந்தது.

சூளமேட்டுப் பிரச்சினையில் நான் இந்தியாவின் சிறையில் இருக்கின்றபோது பிரபாகரன் சங்கர் என்கிற நபரை என்னிடம் அனுப்பினார். சங்கருக்கு இன்னொரு பெயர் விமானப்படைக்குப் பொறுப்பாகவிருந்த சொர்ணலிங்கம். அவர் என்னிடம் வந்து தலைவர் இணைந்து வேலை செய்வோம் என என்னிடம் கூறச்சொன்னதாக தெரிவித்தார். நான் அவரிடம், சகோதரப் படுகொலைகளை நிறுத்துமாறு பிரபாகரனிடம் கூறுங்கள் எனத் தெரிவித்தேன்.

நான் இந்தியாவுக்கு வர முன்னர் திலீபனுக்கும் கிட்டருக்கும் இடையில் புரிந்துணர்வு இருந்தது. அந்தப் புரிந்துணர்வு என்னவென்றால் எனக்கு அதைக் கூறவிருப்பமில்லை. இருந்தாலும் கூறுகிறேன். எங்களில் ஒன்று போனால் நான் அவர்களில் ஒன்றை எடுத்துவிடுவது. அது பழிவாங்கும் கொலைவெறி என்றல்ல. அவர்களுக்கு விளங்கும் பாசையில் பேசவேண்டும் என்பதற்காகத்தான் நான் அவ்வாறு செய்தேன். இவையெல்லாம் 1986 மே மாதத்திற்கு முதல் நடந்தவை. அதற்குப் பின்னர் எனக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு இணக்கப்பாடு வந்தது. என்ன இணக்கப்பாடு என்றால், எங்களுடைய ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்கள் எங்காவது தவறு செய்தால் அவர்கள் உடனடி நடவடிக்கைக்குப் போகாமல் எனக்கு அறிவிப்பது. நான் நடவடிக்கை எடுப்பது. அதேபோல புலிகளில் யாராவது தவறு செய்தால் எங்களுடைய உறுப்பினர்கள் உடனடி நடவடிக்கைக்குப் போகாமல் எனக்குத் தெரியப்படுத்தினால் நான் புலிகளுக்குத் தெரியப்படுத்துவது என்கிற இணக்கப்பாடு இறுதிநேரத்தில் இருந்தது.

அந்த நேரத்தில் தான் கிட்டரும் திலீபனும் எனக்குக் கூறினார்கள். தங்களுடைய இலக்கு தனி நாடு தான்.



நானும் கிட்டத்தட்ட அந்த இலக்கில் தான் அன்று இருந்தேன். பிரபாகரன் அந்த இலக்கினை கைவிட்டால் நாங்கள் இங்கு வரவிடமாட்டோம் அல்லது இயக்கத்தைக் கலைப்போம் என்று கூறினார்கள். அதனால் தலைவருடன் கதைத்து ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வருமாறும் கூறினார்கள். இது தான் நடந்தது. நாங்கள் அங்கு போகும்போது இறுதிநேரத்தில் நாபா தோழர் வரமாட்டேன் என்றும் நீங்கள் செல்லுங்கள் என்றும் கூறினார். எனக்கு மக்கள் கூடிய வாக்குகளையும் ஆசனங்களையும் தந்தால் நான் 15-20 எல்லாம் எதிர்பார்க்கவில்லை. ஒரு நாலைந்து ஆசனங்களைத் தந்தால் இரவோடிரவாக என்னால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதைத்தான் நான் அன்றும் இன்றும் கூறிவருகின்றேன்.

மற்றைய கட்சியினருக்கு 15-20 ஆசனங்களை மக்கள் கொடுத்தும் செய்யவில்லை. மற்றவர்களுக்கும் கொடுத்தால் செய்யலாம் தானே என நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் வழங்கியும் அவர்கள் ஏன் செய்யவில்லை. கூட்டமைப்பு யாராகவிருந்தாலும் அவர்கள் செய்யவில்லையே. நான் கேட்கிறேன் நீங்கள் தனித்தனியே போட்டி போடுங்கள். மக்கள் ஆதரவினைக் காட்டுங்கள். பின்னர் நாங்கள் இணையலாம்.

**கேள்வி : தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையை கேட்டுவிட்டு எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைவது?**

பதில் : ஏன்? தனிநாடா. தேசியத் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். தமிழ் மக்களுடைய தேசியத் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். சிவசிதம்பரம் அவர்கள் கூட்டுச்சேர்ந்து வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். அந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் ஒருதிட்டமும் இருக்கவில்லை. அதில் நம்பிக்கையும் இருக்கவில்லை. தேர்தலில் வாக்குகளை அபகரிப்பதற்காக முன்வைத்தது தான் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினுடைய கோட்பாடும் கொள்கைகளும். இவையொன்றும் சரியாக இல்லை என்பதால் தான் நாங்கள் தனியாகச் சென்றோம்.

என்னுடைய நிலைப்பாடு என்னவென்றால் நாங்கள் அனைவரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் உங்களுக்குத் தெரியும் ஈ.என்.டி.எல்.எப் என்று ஒரு கூட்டு இருந்தது. ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, டைகர்ஸ். இதில் கூட நாங்கள் அனேக பிரச்சினைகளை பேசித் தீர்க்கின்ற நிலைமை இருந்தது. நீங்கள் தமிழ்த் தேசியம் பற்றிக் கூறினீர்கள். கெட்ட கொலஸ்ரோல் உடலில் அதிகரிக்கின்றபோது இறப்பில் முடியும். நல்ல கொலஸ்ரோல் கூடினால் உயிர் பாதுகாக்கப்படும். என்னுடைய தமிழ்த்தேசியம் என்பது நல்ல கொலஸ்ரோல். மற்றையவர்கள் கொண்டுவந்த கொலஸ்ரோல் கெட்ட கொலஸ்ரோல். இதனை வரலாறு நிரூபித்திருக்கிறது. தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை, தாயகம் என்பதெல்லாம் ஒரு அரசியலுக்காக அவர்கள் உச்சரிக்கிறார்கள். ஈ.பி.டி.பியின் மேல் இருந்த அரசியல் பயம் காரணமாகத்தான் பிரபாகரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை உருவாக்கினார்.

**கேள்வி : அப்படி இல்லையே. அவசியம் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது...?**

பதில் : நான் உண்மையைத் தான் கூறுகின்றேன். பொய்யை நான் கூறுவதில்லை. பிரபாகரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியதற்குக் காரணம் ஈ.பி.டி.பி மேல் இருந்த அரசியல் பயம் தான். பிரபாகரனுக்கோ சக கட்சிகளுக்கோ என்மேல் இருக்கக்கூடியது அரசியல் பயம். என்னுடைய உழைப்பு என்கிற விடயங்கள் காரணமாகத்தான் அன்றிலிருந்து என்மேல் அரசியல் பயம். இல்லாவிடின் ஏன் என்னிடம் ஆட்களை அனுப்பவேண்டும். அரசியல் பயம் காரணமாகத்தான் என்மேல் சேறுபூசுகின்றார்கள்.

உதாரணங்களைக் கூறலாம். 1989ஆம் ஆண்டுத் தேர்தல். அரசியல் பயம் தான் அவர்களுக்குக் காரணம். தேசியத்தைப் பற்றி உங்களுக்குத் தெளிவாக புரிந்திருக்கும் என நான் நினைக்கிறேன். நல்ல கொலஸ்ரோலுக்கும் கெட்ட கொலஸ்ரோலுக்கும் இடையில் உள்ள வித்தியாசம். பிரபாகரன் என்ன செய்தார் தமிழ்க் கட்சிகள் எனக் கூறப்பட்ட கட்சிகள் அனைத்தையும் வெற்றி பெற்றவர்கள், தோல்வியடைந்தவர்கள் என அனைவரையும் இணைத்து ஒரு உருளைக்கிழங்கு மூட்டைபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்டிவிட்டு போய்விட்டார். இன்று பிரபாகரன் போனவுடன் கட்டு கழன்றுவிட்டது. அனைவரும் திக்குதிசை தெரியாமல் ஓடிவிட்டனர். இன்று யார் இருக்கிறார்கள். எல்லோரும் தனித்தனியாகத்தான் இருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும். நீங்களும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள்.

**தொடரும்...**

**நேர்காணல் : மறவன்**

# சிறப்பு முகாமிலிருந்து ஓர் திறந்த மடல்

## - இராபர்ட் பயஸ், சிறப்பு முகாம், கொட்டப்பட்டு, திருச்சி.



**உலகத் தமிழர்களுக்கு...**

வணக்கம். நான் இராபர்ட் பயஸ் பேசுகிறேன். உங்களை உங்களோடு உங்களில் ஒருவனாக சுதந்திர மனிதனாக இல்லாமல் எங்களில் ஒருவரான சாந்தனை இழந்து இதோ இந்த கம்பிகளுக்கு பின்னால் இருந்து இப்படி உங்களை சந்திக்க நேர்ந்தது மிகுந்த வருத்தமளிக்கிறது.

32 வருட நீண்ட சிறைக் கொட்டடிக்கு பிறகு கடந்த 11-11-2022 அன்று உச்சநீதிமன்றம் விடுதலை செய்த ஆறு பேரில் நானும் ஒருவன். அந்த ஆறு பேரில் நான், ஜெயக்குமார், முருகன் மற்றும் சாந்தன் ஆகிய நால்வரையும் இலங்கைத் தமிழர் எனக் காரணம் கூறி இந்திய வெளியுறத்துறை நாட்டைவிட்டு வெளியே அனுப்பும் வரை சிறப்பு முகாமில் அடைத்து வைக்க உத்தரவிட்டது.

தொலைந்து போன வாழ்க்கையை எதிர்நோக்கி 32 வருட நீண்ட காத்திருப்பு முற்றுபெறும் தருவாயில் கூட விடுதலையை ருசிக்க முடியாமல், சிறிது நேரம் கூட விடுதலைக் காற்றை சுவாசிக்க முடியாமல் புழல் சிறையிலிருந்து நானும் ஜெயக்குமாரும் வேலூர் சிறையிலிருந்து சாந்தனும் முருகனும் திருச்சி சிறப்பு முகாமிற்கு கொண்டு வந்து அடைக்கப்பட்டோம்.

இதோ முடியப்போகுது 32 ஆண்டுகால சிறைக் காத்திருப்பு என்று எண்ணிய எங்களுக்கு அப்பொழுது விளங்கவில்லை நாங்கள் சிறை மாற்றப்படுகிறோம் என்று. ஆம். அன்று நடந்தேறியது அப்பட்டமான சிறை மாறுதல் தான் என்பதை எங்களுக்கு காலம் தான் விளக்கியது. இது சிறையல்ல சிறப்பு முகாம் தானே என்று எண்ணிய எங்களுக்கு இது சிறையல்ல சிறையை விட கொடுஞ்சிறை என்பதும் எங்களுக்கு போகப்போகத் தான் விளங்கியது.

நாட்டைவிட்டு அனுப்பும்வரை எங்களை சிறப்பு முகாமில் வைக்கிறோம் என்றவர்கள் இன்றைய தேதிவரை நாட்டைவிட்டு அனுப்புவதற்கு எடுத்த முன்னெடுப்புகள் என்னவென்று கேட்டால் மிகப்பெரிய கேள்விக்குறியும் ஆச்சரியக்குறியும் தான் மிஞ்சும். "சிறப்பு முகாமா..? அது ஜெயில் மாதிரிலாம் இல்லைங்க சார். எல்லா வசதிகளும் செய்து கொடுப்போம்" என்று பேசி சமாளிக்கும் அரசும் நிர்வாகமும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 2 உயிர்களை பலி வாங்கியிருக்கிறது.

கடந்த ஜனவரி 28 ஆம் தேதி ஒரு வாரகாலமாக மருந்து மாத்திரை கிடைக்காமல் ஒருவர் இறந்து போனார்.

இப்பொழுது சாந்தன் கல்லீரல் முழுவதும் செயலிழந்து, எழுந்து நிற்கக்கூட முடியாமல் மிக மோசமடைந்து பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவம் ஏதும் பலனளிக்காத நிலையில் இறந்து போயிருக்கிறார். இந்த மரணத்திற்கு யார் பொறுப்பேற்பது...? யாரை நாங்கள் நொந்துகொள்வது...?

அனைத்து அடிப்படை உரிமைகளையும் மறுத்து, உடல்நலன் குன்றி "விடுதலை ஆகிவிடுவோம். விடுதலை ஆகிவிடுவோம்" என்று கனவுகண்டு விடுதலை ஆகிவிட்டோம் என்று பூரிப்பு கிடைத்த தருவாயில் மீண்டும் ஏமாற்றப்பட்டு சிறைமாற்றப்பட்டு இதனால் மனநலனும் பாதிக்கப்பட்டு இறந்துபோன சாந்தனுக்கு சிறை வாழ்வு முடிந்தது. இன்னும் மீதம் மூன்று பேர் இருக்கிறோம். நாங்கள் மீண்டும் காத்திருக்க தொடங்குகிறோம் இந்த சிறப்பு முகாமில்.

சிறையில் கூட சிறை நிர்வாகத்திற்கு சிறை விதிகள் கையேடு இருக்கிறது. அதன்படி கைதிகளுக்கு இருக்கக்கூடிய மற்றும் இல்லாத உரிமைகள் கடமைகள் வரையறுக்கப்பட்டு இருக்கும்.

ஆனால் சிறப்பு முகாமோ சிறையை விட கொடுமையானது. இங்கு எந்த சட்டத்திட்டங்களோ வரையறைகளோ கிடையாது. அரசும், மாவட்ட ஆட்சியரும், முகாம் நிர்வாகமும் என்ன நினைக்கிறதோ அவையெல்லாம் விதிமுறைகளாகவும் சட்டத்திட்டங்களாகவும் ஆகின்றன.

மருத்துவம் கிடையாது என்று இவர்கள் முடிவெடுத்தால் முகாம்வாசிகளுக்கு மருத்துவம் கிடையாது.

தனிமைச் சிறை என்று இவர்கள் முடிவெடுத்தால் தனிமைச் சிறை. யாரும் மனு பார்க்கக்கூடாது என்று இவர்கள் முடிவெடுத்தால் யாரும் மனுப்பார்க்க முடியாது.

இப்படியான நிர்வாகம் தான் நாட்டைவிட்டு வெளியில் அனுப்புவதற்காக என்று காரணம் கூறி சிறப்பு முகாமில் அடைக்கப்படுபவர்கள் அதற்கான எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படாமல் வருடக்கணக்கில் அப்படியே கிடப்பில் போடப்பட்டு இன்னொரு சிறைவாசத்தை அனுபவித்து வருகின்றனர். நாங்கள் சிறு சிறு அடிப்படைத் தேவைகளையும் மற்றும் அடிப்படை உரிமைகளையும் கூட போராடி, உயிரைக் கொடுத்து பெறவேண்டிய சூழலே இருக்கிறது.

எங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியான 32 வருடங்கள் ராஜீவ்காந்தி பெயரைச் சொல்லியே சிறையில் கடத்தப்பட்டது.

இறுதியில் உச்சநீதிமன்றத்தின் விடுதலை ஆணைக்கு பின்னும் எங்களை எங்கள் குடும்பங்களோடு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்காமல் காலங்கடத்தி காலங்கடத்தி இறுதியில் சாந்தனை இழந்து நிற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

மீதமுள்ள நாங்களும் எங்களுக்கான ஒவ்வொரு அடிப்படை உரிமையையும்



பெறுவதற்கு இதுவரை எண்ணற்ற மனுக்களையும், வழக்குகளையும், உண்ணாநிலை போராட்டங்களையும் மேற்கொண்டே பெற்று வருகின்றோம். அதில் பெரும்பான்மையான வாக்குறுதிகள் காற்றிலே போகும். மீதி, கேட்கப்படாமலே மக்கிப் போகும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், இந்த மாத தொடக்கத்தில் இலங்கை துணைத் தூதரகம் அழைத்துச் செல்ல வேண்டும் என்று நானும்முருகனும்உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்டபொழுது ஒரு வாரத்தில் அழைத்துச் செல்கிறோம் என்று எங்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டு 20 நாட்களை கடந்தும் அது தொர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இவ்வாறில்லாமல் உரிய அரசுப் பொறிமுறைகள் அவர்கள் கடமையை முறையே செய்திருந்தால் இன்று சாந்தன் உயிருடன் அவருடைய தாயாருடனும் குடும்பத்தினருடனும் மகிழ்ச்சியாக இன்னும் ஒரிரு வருடங்களாவது இருந்திருப்பார்.

33 வருடங்களாக தனது மகனை பிரிந்து கண்பார்வை குன்றி வயது முதிர்ச்சியடைந்து கடைசியாக ஒருமுறையாவது தனது மகனை பார்த்துவிடவேண்டும் என்று ஏங்கிய ஒரு தாயின் கையில் அந்த மகனின் உயிரற்ற உடலைத்தான் கொண்டுபோய் சேர்க்கப் போகிறோம்.

கடைசியாக தனது கையால் தன்மகனுக்கு ஒருபிடி உணவு கொடுக்க மாட்டோமா என்று ஏங்கிய அந்த தாய் அந்த மகனுக்கு கடைசியாகக் வாய்க்கரிசி கொடுக்கத்தான் வாய்க்கப்பட்டிருக்கிறார்.

இதோ இன்று தன் மகன் வந்துவிடுவான், என்று எதிர்பார்த்து காத்திருந்த அந்தத் தாயிடம் "உன் மகன் வரவில்லை. அவனின் உயிரற்ற உடல்தான் வருகிறது" என்கிற செய்தியை அந்தத் தாயிடம் யாரால் சொல்லியிருக்க முடியும்.

அத்தகைய கல்நெஞ்சம் படைத்த மனிதர்களும் இவ்வுலகில் வாழ்கிறார்களா என்ன.!?

33 வருடங்கள் கழித்து தன் மகனின் வருகைக்காக மகிழ்ச்சியாக காத்திருந்திருக்கும் அந்த வீட்டில் இந்த செய்தி ஏற்படுத்திய மயான அமைதியின் பேரிரைச்சலை தாங்கிக்கொள்ளும் கனத்த இதயம் கொண்ட மனிதர்களும் இவ்வுலகில் இருக்கிறார்களா என்ன?!

இதோ கடந்த மாதம் என்னுடன் நடந்து மருத்துவ பரிசோதனைக்கு வந்த சாந்தன் இன்று எங்களோடு இல்லை. ஒரு மாதத்தில், எங்களோடு உறவாடி, பேசி உலாவிய சாந்தன் இன்று உயிரோடு இல்லை.

மீதமிருக்கிற, ஜெயக்குமாரும் முருகனும் 33 வருடங்களாக தங்கள் குடும்பங்களை பிரிந்துவாடும் நிலையில் நானோ, மனைவி ஒரு நாட்டில் மகன் ஒரு நாட்டில் தாய், சகோதர சகோதரிகள் வேறு நாட்டில் என சிதறுண்டு சிதைந்துக் கிடக்கும் குடும்பத்தை ஒன்றுசேர்த்து ஒரு நாளேனும் வாழ்ந்து விட மாட்டோமா?!

பச்சிளம் பாலகனாக பார்த்த எனது மகன் எவ்வளவு உயரம் இருப்பான்? அவன் என்னைவிட உயரமா? அல்ல உயரம் குறைவா? அவனுக்கு திருமணம் ஆகி எனக்கு பேரன் பிறந்திருக்கிறானாம்.! நான் எந்த வயதில் என் மகனை பிரிந்தேனோ அந்த வயதில் எனக்கு இப்பொழுது பேரன் இருக்கிறான். அவனதுப் பஞ்சு பாதங்களை அள்ளியெடுத்து ஒருமுறையேனும் என் முத்தங்களை காணிக்கையாக்கிவிட மாட்டேனா..?!

அன்பார்ந்த உலகத் தமிழ் சமூகமே இன்னும் நாங்கள் மூன்று பேர் மிச்சம் இருக்கிறோம். எங்கள் நிலைமை?

நீண்டகால சிறைவாசமும், குடும்பங்களை பிரிந்த துயரமும் எங்களை முழுமையான நோயாளிகளாக்கியுள்ளது. சாந்தனைப் போலல்லாமல் எங்களையாவது எங்கள் கடைசி காலத்தில் மிஞ்சியிருக்கிற கொஞ்ச காலம் எங்கள் தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்துவிட்டுப் போக இந்த அரசு இனியாவது நடவடிக்கை எடுக்குமா...?

எங்கள் குடும்பங்களை பிரிந்து வாழ்க்கையை இழந்து வாடும் இப்பெருந்துன்பங்கள் முடிவுக்கு வருமா...?

**இப்படிக்கு,**
**இராபர்ட் பயஸ்**



# நாட்டு நலனுக்காக பொதுவான ஒருமித்த கருத்துடன் இணையுங்கள்!



கடந்தவாரத் தொடர்ச்சி...

அடுத்த மூன்று, நான்கு போகங்களில் உலர் வலயத்தில் விவசாய நிலங்களின் உற்பத்தியை இரண்டு, மூன்று மடங்கினால் உயர்த்தும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். அதற்கான கொள்கை ரீதியிலான முடிவுகளை நாங்கள் எடுத்துள்ளோம். இம்மாதம் முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டு இப்பணிகள் ஆரம்பிக்கப்படும். இவ்வாறு, உலர் வலயத்தில் விவசாயப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும், ஈரவலயப் பகுதியில் உள்ள நிலத்தை ஏனைய வர்த்தகப் பயிர்களுக்குப் பயன்படுத்தவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

எழுபதுகளில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட பயனுள்ள பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் தற்போது வீணாகிவிட்டன. சில நிலங்களில் உரிய பயனைப் பெறுவதில்லை. சில நிலங்கள்முற்றாகப்பயன்படுத்தப்படவில்லை. ஜனவசம, பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் போன்ற பல்வேறு அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான இந்தக் காணிகள் வீணாகி வருகின்றன. அது மாத்திரம் அல்ல. இந்த அரச நிறுவனங்களைப் பராமரிக்க பில்லியன் கணக்கான அரச பணம் செலவிடப்படுகிறது. இரு பக்கத்திலும் நாட்டிற்கு இழப்பு. பாரிய வீண்விரயம் இடம்பெறுகிறது.

இந்த நிலங்களிலிருந்து அதிகபட்ச உற்பத்தியைப் பெறுவதற்கு பயனுள்ள வேலைத்திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். இந்த நிலங்கள் உள்நாட்டுத் தொழில்முனைவோருக்கு ஏற்றுமதி வணிக பயிர்ச்செய்கைக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படும். அவசியம் ஏற்பட்டால், அந்த தொழில்முனைவோர் வெளிநாட்டு தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டைப் பெற அனுமதியும் வழங்குவோம். முறையாகப் பயன்படுத்தப்படாமல் வீணாகப்போகும் நிலங்களை அந்நியச் செலாவணி ஊற்றுக்களாக மாற்றி பொருளாதார வளர்ச்சிக்கு வலுவாகப் பயன்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

கடந்த சுதந்திர தினத்திற்கு பிரதம அதிதியாக இங்கு வருகை தந்த தாய்லாந்து பிரதமர், தனது நாட்டில் முன்னெடுத்த விவசாய புரட்சி குறித்த விடயங்களைக் குறிப்பிட்டார். தாய்லாந்து பாரம்பரிய முறைகளில் சிறைப்பட்டிருக்காமல் நவீன தொழில்நுட்பத்தை சரியாகப் பயன்படுத்துவதால் விவசாயத்தின் மூலம் அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது. அவற்றிலிருந்து நாமும் பாடம் கற்க வேண்டும். வெளிநாட்டு முதலீடுகள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்துகிறோம். நமது பொருளாதாரத்தை விரைவாக வலுப்படுத்த வெளிநாட்டு முதலீடுகள் ஊடாக பாரிய உந்து சக்தி கிடைக்கிறது. ஆனாலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வரத் தயங்குகின்றனர்.

இலங்கையில் முதலீடு செய்வது ஒரு தலைவலி. பிரச்சினை. அனுமதி பெறுவதில் பல உத்தியோபூர்வ தடைகள் உள்ளன. அது மட்டும் அல்ல. சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. அவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து, தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்களை பாரிய அளவில் கவரும் வகையில் வேலைத்திட்டங்களை நாம் தற்போது தயாரித்துள்ளோம். ஒரு எளிய செயல்முறை மூலம் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதை இது சாத்தியமாக்குகிறது. இது ஊழலை மோசடிகளைத் தடுக்கிறது.

சீனா, வியாட்நாம் போன்ற நாடுகளில் முதலீடு செய்வதற்கான அனைத்து அனுமதிகளும் வசதிகளும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் ஒரே கூரையின் கீழ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நிலம் மட்டுமின்றி, மின்சாரம், நீர் வசதிகள், வீதிக் கட்டமைப்பும் மிக விரைவாக செய்து தரப்படுகிறது. பெரும்பாலான பணிகள் கணனி மூலம் செய்யப்படுவதால், சட்ட விரோத செயல்களுக்கு வாய்ப்பில்லை. இந்த அனைத்து விடயங்கள் மற்றும் சர்வதேச தரங்களின் அடிப்படையில், தற்போதைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் பொருளாதார ஆணைக்குழுவை அமைப்பதற்கான அடிப்படை பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பரந்த அளவில் நடைமுறைப்படுத்தப்படும் பலவிதமான முதலீட்டு சட்டங்கள் மற்றும் திட்டங்கள் இந்த ஆணைக்குழு மூலம் செயல்படுத்தப்படும்.

அதேபோல் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தவேண்டும். இரண்டாம் உலகப் போர் காலத்திலேயே இலங்கையின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளின் அடிப்படை சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அக்காலத்தில் நாம் காலணித்துவ நாடாக இருந்தோம். அப்போது நாம் மிகவும் வறுமையான நாடாக இருந்தோம். எனவே, அத்தகைய சமூகத்திற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி மற்றும் சுகாதார நடைமுறைகளின் அடிப்படையில் நவீன உலகத்தை அணுகுவது சாத்தியமற்றது. இவற்றின் மூலம் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை சமாளிக்கவும் முடியாது. அதனால் சர்வதேச அனுபவம், நடைமுறைகளின் அடிப்படையில், இரண்டு துறைகளுக்குமான புதிய அணுகுமுறைகள் மற்றும் புதிய சட்டத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். புதிய சூழலுக்கு ஏற்ற வகையில் மனித வளம் மேம்படுத்தவேண்டும். வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரின் பாதுகாப்பிற்காக துரித நவீனமயமாகக்கல் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். விசேடமாக கல்வி மறுசீரமைப்புக்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

உலகின் எதிர்காலம் புதிய தொழில்நுட்ப அறிவின் மீதே தங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் திறன் மிக்க இளைய தலைமுறையை உருவாக்க வேண்டும். அதற்காகவே உயர்தரத்தில் சித்திபெறும் மாணவருக்கு செயற்கைக் நுண்ணறிவுக் கல்வியை வழங்குவதற்கான கொள்கையைத் தயாரித்து வருகிறோம். அதற்கான பல அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை நிறுவும் பணியை மேற்கொண்டு வருகிறோம். சாதாரண தரம், உயர்தரத்தில் சித்தி பெறாத அனைத்து மாணவர்களுக்கும் தொழிற்கல்லூரிகளை உருவாக்குவோம்.

புதிய அறிவு மற்றும் புதிய தொழில்நுட்பத் தெரிவுடன் கூடிய புதிய சந்ததியை உருவாக்குவதற்கு அவசியமான பின்னணியை நாம் ஏற்படுத்துவோம். அதேபோல் எமது நாடு ஒரு தீவாகும். அதற்கு உகந்த வகையிலான பாதுகாப்பை உறுதி செய்யும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டில் உள்ள அனைத்து பாதுகாப்பு வலையமைப்புக்களும் அதற்கேற்ப நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றன. புலனாய்வு அமைப்புகள், பாதுகாப்பு உபகரணங்கள், பயிற்சி முறைகள், படையினர், இராணுவ உபகரணங்கள், மூலோபாய நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும், நாட்டில் ஏற்படக்கூடிய பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்தி வருகிறோம். நமது வெளிநாட்டு உறவுகளை மறுபரிசீலனைசெய்யவேண்டியதுகாலத்தின் தேவையாகும். அதேபோல் பூகோள அரசியல் நகர்வுகளின் மாற்றங்களுக்கு ஏற்ப பொருளாதார வாய்ப்புக்களைப் பெறும் வகையில், உரிய பலன்களைப் பெறும் வகையில் மறுசீரமைக்கவேண்டும். எனவே, அனைத்து நாடுகளுடனும் அணிசேராக் கொள்கையுடனும் நட்புறவு அடிப்படையிலும் வெளிநாட்டு உறவுகளைத் பின்பற்றவேண்டியது அவசியமாகும். அதற்கேற்ப நமது வெளியுறவுக் கொள்கைகள் காலோசிதமானதாக மாற்ற வேண்டும்.

அதேபோல், பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கிகொள்ள புதிய முறையிலான வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். இதற்கமைய எமது வெளியுறவுக் கொள்கைகளை காலத்திற்கேற்ற வகையில் மறுசீரமைத்துக் கொள்வோம். நமது தயாரிப்புகள் வெளிநாட்டு சந்தைகளைச் சென்றடைவதற்கு அவசியமான அனுமதியை பெற்றுத் தரக்கூடிய வகையில் பொருளாதார உறவுகளை கட்டமைப்போம். அதற்காக பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட ஆரம்பித்துள்ளோம். இதற்கமைய அண்மையில் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை செய்துகொண்டோம். இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், முழுமையான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமாக விரிவுபடுத்தப்படும். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் சீனா, இந்தோனேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைக் கைசாத்திட எதிர்பார்த்துள்ளோம். அதேபோல்வலயத்தின் பரந்துபட்ட பொருளாதார கூட்டமைப்பான RCEP இல் இணையவுள்ளோம். அதேபோல் ஐரோப்பிய சங்கத்தின் வர்த்தகத்துக்கான பொது முறைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவோம். இவ்வாறு பல்வேறு துறைகளை நவீனப்படுத்துவதன் பலனாக நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். நாட்டின் அனைத்துப் தரப்பினருக்கும் பலன்கள் கிடைக்கும் வகையில் வெற்றிகரமான திட்டத்தைச் செயல்படுத்தும் அதேநேரம் நல்லிணக்கமும் சமூக நீதியும் உறுதிப்படுத்தப்படும்.

நாங்கள் மற்றொரு விடயம் குறித்து கவனம் செலுத்துகிறோம். இன்று எமது பொருளாதாரம் கொழும்பு நகரையும் மேல் மாகாணத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. நாட்டின் 46 வீதமான பொருளாதாரம் மேல் மாகாணத்திலிருந்தே முன்னெடுக்கப்படுகிறது. இந்நிலை மாற வேண்டும். மேல் மாகாணத்திற்கு வெளியே பொருளாதாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, ஹம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட நகரங்களிலும் எமது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். தற்போதும் இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

மேலும், ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசியலமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம். தொழிற்கல்வி, விவசாயம் போன்ற துறைகளை உதாரணமாகக் கூறலாம். அதன் மூலம் ஒவ்வொரு மாகாணத்திலும் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த முடியும். மாகாணங்களுக்கு இடையில் பொருளாதாரப் போட்டித் தன்மையை உருவாக்குவதன் மூலம், ஒன்பது மாகாணங்களும் ஒரே நேரத்தில் அபிவிருத்தியடைவதற்கான வாய்ப்பு உருவாகும்.

எமது நாட்டின் புவியியல் அமைவிடத்தை மையப்படுத்தி உயரிய பலனை அடைந்துகொள்ள எதிர்பார்க்கிறோம். அதற்காக மூன்று துறைமுகங்களில் புதுவிதமான அபிவிருத்தியை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். அதனால் இந்து சமுத்திரத்தின் சேவை மத்தியஸ்தானமாகவும் பொருளாதார மத்திய நிலையமாக மாற்றுவதற்கும் எதிர்பார்க்கிறோம். அதற்கு புத்துயிர் அளிக்கும் வகையில் கொழும்பு துறைமுக நகரத்தை விசேட நிதி வலயமாக பிரகடனப்படுத்துவோம். அதற்குள் வெளிநாட்டு நிதி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான சட்டத்திட்டங்களை உருவாக்குவோம்.

எமது நாட்டின் தேசிய வளம் எமது இளம் சமூகத்தினர் என்பதை அடிக்கடி நினைவுகூறுகிறேன். அந்த வளத்தைப் பாதுகாப்பது எமது ஒருமித்த நோக்கமாகும். இளம் சமூகத்தின் பாதுகாப்பு நாட்டின் பாதுகாப்பிற்கு நிகரானதாகும். கடந்த காலங்களில் இளம் சமூகத்தினர் நாட்டை விட்டுச்சென்றனர்.

11 ஆம் பக்கம் பார்க்க...

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு**



# சினி துளிகள்



## த்ரிஷ்யம் செய்த சாதனை



2013ல் மலையாளத்தில் ஜீத்து ஜோசப் இயக்கத்தில் வெளியான க்ரைம் திரில்லர் படம் திரிஷ்யம். அதில் மோகன்லால், மீனா உள்ளிட்ட பலர் நடித்து இருந்தனர்.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட பல மொழிகளில் இந்த படம் ரீமேக் ஆகி இருக்கிறது. தமிழில் கமல் நடிப்பில் இந்த படம் பாபநாசம் என்ற பெயரில் ரீமேக் ஆகி இருந்தது.

இந்நிலையில் தற்போது திரிஷ்யம் படம் ஹொலிவுட்டில் ரீமேக் ஆக இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஏற்கனவே கொரியன் மொழியில் ரீமேக் ஆகும் நிலையில் ஹொலிவுட் செல்கிறது திரிஷ்யம் கதை.

ஹொலிவுட்டில் ரீமேக் ஆகும் முதல் இந்திய படம் இது என்ற சாதனையையும் இது படைக்க இருக்கிறது.

## சுந்தர்.சி படத்தில் நடித்தது தான் நான் செஞ்ச பெரிய தப்பு – கிரண்

இயக்குனராகவும், நடிகராகவும் பல்வேறு ஹிட் படங்கள் கொடுத்தவர் சுந்தர்.சி. அவர் இயக்கிய அன்பே சிவம் படத்தில் கிரண் ரத்தோட் ஒரு முக்கிய ரோலில் நடித்து இருந்தார்.

கிரணின் முதல் படம் ஜெமினி. அது ஹிட் ஆன நிலையில் அடுத்து பல்வேறு பட வாய்ப்புகள் அவருக்கு குவிந்தது. கிளாமர் ஹீரோயின் என்ற அவரது இமேஜ் மாறுவதற்காக தான் அன்பே சிவம் படத்தில் தேர்வு செய்து நடித்தார்.

அதற்கு பிறகு ஒரு சில படங்களில் அவர் நடித்தாலும் ஒருகட்டத்தில் வாய்ப்புகள் குறைந்த நிலையில் கிளாமராக ஒரு பாடலுக்கு மட்டும் டான்ஸ் ஆட தொடங்கினார். திருமலை படத்தில் விஜய் உடன் வாடியம்மா ஜக்கம்மா என்ற பாடலுக்கு அவர் ஆடி இருந்தார்.

படத்தில் நடிக்காமல் நீண்ட நாட்கள் இருந்த நிலையில் சுந்தர்.சியிடம் பட வாய்ப்பு கேட்டாராம் கிரண். அதன் பிறகு தான் ஆம்பள படத்தில் ஒரு ரோலில் நடிக்க வைத்தாராம்.

"அந்த படத்தில் நான் செட் ப்ராப்பர்டி போல தான் இருந்தேன். அதில் நடித்தது நான் செய்த தவறு தான்" என சமீபத்திய பேட்டியில் கிரண் கூறி இருக்கிறார்.



## சூர்யா கொடுத்த வாய்ப்பில் வசூல் மன்னனாக மாறிய விஜய்



விஜய் இன்று தமிழ் சினிமாவின் உச்சத்தில் இருக்கிறார். இவர் நடிப்பில் தற்போது Goat திரைப்படம் உருவாகி வருகிறது. இப்படத்தை முடித்தபின் தளபதி 69ல் நடிக்கவுள்ளார். இதுவே அவருடைய கடைசி படம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் சூர்யாவிற்கு நெருக்கமானவர்களில் ஒருவர் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா. இவர் ஸ்டுடியோ க்ரீன் தயாரிப்பு நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். தற்போது சூர்யா நடித்து வரும் கங்குவா படத்தை கூட இவர் தான் தயாரித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா விஜய் மற்றும் சூர்யா சம்பந்தப்பட்ட விஷயம் குறித்து பேசியுள்ளாராம்.

இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்த துப்பாக்கி படத்தில் முதன் முதலில் நடிக்கவிருந்தது சூர்யா என கூறியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

துப்பாக்கி படத்தின் கதையை சூர்யாவிற்காக தான் ஏ.ஆர். முருகதாஸ் எழுதினாராம். ஆனால், அதில் விஜய்க்கு நடிக்க சூர்யா வாய்ப்பு கொடுத்ததாக ஞானவேல் ராஜா பேசியுள்ளார். துப்பாக்கி தான் விஜய்யின் நடிப்பில் வெளிவந்து ரூ. 100 கோடிக்கும் மேல் வசூல் செய்த முதல் திரைப்படமாகும்.

ஆகையால் சூர்யா கொடுத்த வாய்ப்பில் தான், துப்பாக்கி படத்தில் நடித்தார் என ஞானவேல் ராஜா பேசியதாக கூறப்படும் செய்தி ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.

## துருவ் விக்ரமிற்கு ஜோடியாகும் பிரபல நடிகை



பிரபல நடிகர் விக்ரமின் மகன் துருவ் விக்ரம், ஆதித்ய வர்மா படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார். இதை தொடர்ந்து தனது தந்தையின் நடிப்பில் வெளிவந்த மகான் திரைப்படத்தில் வில்லனாக நடித்து அசத்தியிருந்தார்.

இதன்பின் துருவ் விக்ரம், இயக்குனர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் நடிக்க கமிட்டானார். ஆனால் இப்படத்தின் படப்பிடிப்பு இதுவரை துவங்கவில்லை. கபடி போட்டியை மையப்படுத்தி எடுக்கவிருக்கும் இப்படத்திற்காக கபடி பயிற்சியை எடுத்து வருகிறார் துருவ் விக்ரம்.

மாமன்னன் படத்தை தொடர்ந்து தனது சொந்த தயாரிப்பில் வாழை எனும் திரைப்படத்தை மாரி செல்வராஜ் எடுத்துள்ளார்.

இதன்பின் தற்போது துருவ் விக்ரம் படத்தை இயக்க தயாராகி வரும் நிலையில், இப்படத்தின் கதாநாயகி குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இப்படத்தில் பிரபல நடிகை தர்ஷனா ராஜேந்திரன் என்பவர் தான் கதாநாயகியாக நடிக்கவுள்ளாராம்.

இவர் மலையாளத்தில் வெளிவந்த ஹிருதயம், ஜெய ஜெய ஜெய ஜெய ஹே போன்ற திரைப்படங்களிலும், தமிழில் வெளிவந்த கவண் மற்றும் இரும்பு திரை உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும்

# நடந்தது என்ன?



## சுழியோடி

## 35

இதன்போது பல நூற்றுக்கணக்கான சனங்கள் கொல்லப்பட்டிருந்தனர். செஞ்சோலைப் படுகொலை, தமிழ்ச்செல்வன் கொலை என்பவை பலருக்கும் நினைவுக்கு வரலாம். கிளிநொச்சியில் நடந்த பிறிதொரு தாக்குதலில் 26.11.2007 அன்று பிரபாகரன் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார்.

இக்காலகட்டத்தில் சிறிலங்கா இராணுவம் சனங்களின் மீது தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்ததாக யாரும் சொல்ல முடியாது. ஆனால் படைத்தரப்பின் தாக்குதல் வலயத்திற்கு அப்பால் மக்கள் ஒடிக்கொண்டிருந்தார்கள். அப்படி ஓடிப் பாதுகாப்புத் தேடிக்கொள்வதற்கான இடம் சனங்களுக்கிருந்தது. ஆனால், இப்படி ஓடிக்கொண்டிருந்தபோது அவர்களுக்கான உழைப்பு, வருமானம், இருப்பிடம், பொருட்கள் என்பன இல்லாத நிலை உருவாகியது. பொருட்களைக் கொழும்பில் இருந்து வன்னிக்குள் எடுத்துவருவதற்கான தடையும், கட்டுப்பாடுகளும் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கே பெரும் நெருக்கடியை உருவாக்கியது. பஞ்சம் பட்டினியும் தலைவிரித்தாடின. 'வன்னி' இலங்கையின் நெற்களஞ்சியம் என்று வர்ணிக்கப்படுவதுண்டு. சனங்கள் தங்களின் சேமிப்பிலும் சேகரிப்பிலுமிருந்த பொருட்களையே எடுத்துச்செல்ல முடியாத நிலையில் படை நடவடிக்கைகள் தீவிரமடைந்ததால் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

கிளிநொச்சியைக் கைப்பற்றிய படையினர் ஆனையிறவினூடாக யாழ்ப்பாணத்துடன் இணைந்தனர். இந்த இணைவோடு யாழ்ப்பாணத்திற்குள் முடக்கப்பட்டிருந்த 40 ஆயிரம் இராணுவத்தினரும் படை நடவடிக்கையில் ஈடுபடும் நிலை உருவானது. ஏற்கனவே மணலாற்றில் இருந்து முல்லைத்தீவுப் பட்டினம் வரையான பகுதியைப் படைத்தரப்புக் கைப்பற்றியிருந்தது. இதற்குள் புலிகளின் முக்கியமான தளபதிகள் பலரும் கொல்லப்பட்டிருந்தனர். அடுத்தது புலிகளின் உறுப்பினர்களிடமும் சனங்களிடமும் பெருமதிப்பைப் பெற்றிருந்த தாக்குதல் தளபதி பிரிகேடியர் பால்ராஜின் மரணம். (இவர் மாரடைப்பால் உயிரிழந்திருந்தார்.) இவை புலிகளைக் கடுமையாகப் பாதித்திருந்தன. அதிலும் கருணா அரசுடன் இணைந்திருந்ததனால் புலிகளின் படைவலு, பிரபாகரனின் சிந்தனைப் போக்கு, கள அமைவு எனச் சகலவற்றையும் கருணா படைத்தரப்புக்கு வழங்கியிருப்பார் என்ற அபிப்பிராயமும் உண்டு.

இவ்வாறு நிலைமைகள் பாதகமாக அமைந்திருந்தபோதும் புலிகளின் ஊடகங்களும் உறுப்பினர்களில் பெரும்பகுதியினரும் 'தலைமையின் மீது நம்பிக்கை வையுங்கள். எந்தச் சூழலிலும் நாம் தோற்றுப்போக மாட்டோம்' என்று மக்களுக்குச் சொல்லிக்கொண்டே இருந்தனர். யுத்தமோ மிக மூர்க்கத்தனமாகச் சனங்களைத் தாக்கிக்கொண்டிருந்தது. இப்போது சனங்களின் சாவு வீதம் சடுதியாக அதிகரிக்கத்தொடங்கியது. கட்டாய ஆட்சேர்ப்பு எல்லா வகையான வரம்புகளையும் மீறிக் குடும்பத்தில் எத்தனைபேரையும் எங்குவைத்தும் எப்படியும் பிடித்துக்கொள்ளலாம் என்றாகியது. முன்னர் போராளிக் குடும்பங்களும் மாவீரர் குடும்பங்களும் ஆட்சேர்ப்பில் விலக்களிக்கப்பட்டிருந்தன. இறுதியில் இந்த வேறுபாடுகள் எதுவும் கடைப்பிடிக்கப்படாமல் கண்டபடி ஆட்சேர்ப்பு நடக்க ஆரம்பித்தவுடன் சனங்களுக்கும் புலிகளுக்குமிடையில் முரண்பாடுகள் அதிகரித்தன. சனங்கள் புலிகளைப் பகிரங்கமாகவே எதிர்க்கவும் தாக்கவும் தொடங்கினர். அவர்களுடைய உடைமைகளுக்கும் வாகனங்களுக்கும் தீவைத்துக்கொளுத்தினர். இந்தக் கட்டத்தில் புலிகளின் கடந்தகால முஸ்லிம் விரோத நடவடிக்கைகளையும் பிற இயக்கங்கள் மீது புலிகள் விதித்த தடைகளையும் மேற்கொண்டிருந்த தாக்குதல்கள் படுகொலைகளையும் புத்திஜீவிகள் மீதான கொலை அச்சுறுத்தலையும் சிலர் வெளிப்படையாகவே கண்டித்தனர்.

இதேவேளை ஜனவரி 15க்குப் பின்னர் வன்னி கிழக்கில் விசுவமடு தொடக்கம் மக்கள் கொல்லப்படத் தொடங்கினர். போர் மிகவும் உக்கிரமாக நடக்கையில் சனங்கள் இனி ஓடுவதற்கு இடமில்லை என்ற நிலை உருவானது. முல்லைத்தீவுக்கு அண்மையில் இருந்த ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்புப் பகுதிகளையும் படைத்தரப்பு கைப்பற்றியதுடன் சனங்களின் கதி மிகவும் ஆபத்தாகியது. இங்கிருந்து புலிகள் சனங்களைக் கவசமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். ஏற்கனவே சனங்கள் வெளியேறுவதற்கு இறுக்கமான தடையை விதித்திருந்த புலிகள் மேலும் பாதுகாப்பு நிலையை உயர்த்திச் சனங்கள் எங்கும் தப்பிச் செல்லாதிருக்கும்படி பார்த்துக்கொண்டனர். சனங்களின் செறிவு அதிகரிக்கும் போது யுத்தமும் சனங்களுக்குக் கிட்டவாக, நெருங்கிய சூழலில் தாக்குதல்களில் சனங்கள் கொல்லப்படத் தொடங்கினர். இந்த நாட்களின் நிகழ்ச்சிகளை விவரிக்கவே முடியாது.

குறிப்பாகப் படையினர் விசுவமடு என்ற இடத்தை நெருங்கியபோது நடத்திய தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். உடையார்கட்டுப் பகுதியில் இருந்து இந்தப்படுகொலைநாடகம் மிக உக்கிரமான நிலையில் ஆரம்பித்தது. தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். ஏற்கனவே கைப்பற்றிய சில பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான சனங்கள் மட்டும் படையினரிடம் அகப்பட்டிருந்தனர். ஆனால் உடையார்கட்டு, சுதந்திரபுரம் பகுதி மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சனங்களை நிலைகுலைய வைத்தன. முன்னர் நடந்த படை நடவடிக்கைகளின் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மருத்துவமனைகள் வெவ்வேறு இடங்களில் மட்டுப்பட்ட அளவில் இயங்கினாலும் அவற்றால் முழு அளவிலான சேவைகளை வழங்க முடியவில்லை. ஆனால் இரவு பகல் என்றில்லாமல் அங்கிருந்த மருத்துவர்கள் பெரும் சேவையாற்றினர். மனித குலம் தன் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத அளவுக்கான பெரும் சேவையை இவர்கள் செய்தனர். ஆனால் இவர்களுடைய அரசியல் பார்வை குறித்த விமர்சனங்கள் உண்டு என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மருந்துத்தடை அதனால் ஏற்பட்ட தட்டுப்பாடுகளின் மத்தியிலும் தாக்குதல்களில் காயப்படும் மக்களைக் காப்பாற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளில் மிகவும் உயிராபத்துகள் நிறைந்த சூழலில் இந்த மருத்துவர்களும் பணியாளர்களும் தொண்டாற்றினார்கள். அதேவேளை புலிகள் இந்த மருத்துவமனைகளைத் தமது நிழல் நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்தி வந்தனர்.

உடையார்கட்டுப் பகுதியில் படைத்தரப்பு நடத்திய தாக்குதல்கள் மிகக் கொடியவை. சனங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிநிலைகுலையவைத்து அவர்களைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்கும் உபாயத்தைப் படைத்தரப்புக் கைக்கொள்ளத் தொடங்கியது. இது மிகக் கேவலமானது. மனிதாபிமானத்துக்கு முற்றிலும் எதிரான செயல் இது. எந்த வகையான நியாயப்படுத்தல்களையும் செய்ய முடியாத நடவடிக்கை இது.



மிகச் செறிவாக அடர்ந்திருந்த சனங்களை இலக்குவைத்து ஆட்லறி மற்றும் எரிகணைத் தாக்குதல்கள் - றொக்கற் தாக்குதல்களைப் படைத்தரப்பு நடத்தியது. இதன்போது ஐ.நாவின் உலக உணவுத்திட்ட அதிகாரியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதியும் வன்னியிலிருந்தனர். இந்தத் தாக்குதல்களை அடுத்து இவர்கள் வன்னியை விட்டு வெளியேறினர். அந்தளவுக்கு அவர்களுக்கே பாதுகாப்பற்ற நிலைமை என்றானது. சனங்கள் என்ன செய்வது, எங்கே செல்வது, எப்படித் தப்புவது என்று தெரியாமல் திணறினர்.

கண்முன்னே சிதறிப் பலியாகும் உடல்கள். இரத்தமும் சிதிலமுமான சூழல். சாவோலம். தீயும் புகையுமாக எரியும் காட்சி. சடங்குகள் சம்பிரதாயங்கள் இல்லாமல் கொல்லப்படும் இடங்களிலேயே சடலங்களைப் புதைக்க வேண்டிய நிலை. சவப்பெட்டிகளே இல்லை. சடங்குகளுக்கு அவகாசமில்லை. ஆனால் சாவுகள் மட்டும் தொடர்ந்து கொண்டேயிருந்தன. குடும்பம் குடும்பமாகக் கொலைகள் நடந்தன.

கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பல நூற்றுக்கணக்கான படுகொலைகளைச் சந்தித்திருந்த ஈழத் தமிழ்ச் சமூகம் இப்போது நடந்த படுகொலைகளை ஜீரணிக்க முடியாமல் திணறியது. அந்தளவுக்கு அதன் அனுபவப்பரப்புக்கு அப்பால் முன்னெப்போதையும்விட மிக மோசமாக இந்தக் கொலைகள் நடந்தன. வீதிகள், காலனிகள், குடிசைகள் எங்கும் எங்கும் பிணக்குவியல்களே. தாக்குதல்களும் சாவுகளும் இப்படித் தொடர்ந்து கொண்டிருக்கும்போது, அவலம் உச்சநிலையைக் கடந்துவிட்டபோதும் இருதரப்பும் தமது நடவடிக்கைகளை மாற்றவில்லை.

சனங்கள் என்னதான் வந்தாலும் பரவாயில்லை என்று தீர்மானித்துப் படையினரிடமே தப்பிச் செல்லத் தொடங்கினர். சிலர் கடல் வழியாகத் தப்பிச்சென்றனர். மிகச்சிலர் இந்தியாவுக்குத் தப்பி ஓடினர். இவ்வாறு தப்பிச் செல்லும் மக்களைத் தடுக்கும் நடவடிக்கையை அரசியல் துறையின் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தலைமையிலான புலிகளின் அணிகள் மேற்கொண்டன. படையினரின் கொலைவெறித் தாக்குதல்களில் இரண்டாயிரம் வரையான மக்கள் உடையார்கட்டு, சுதந்திரபுரம், வள்ளிபுனம், தேவிபுரம், புதுக்குடியிருப்புப் பகுதிகளில் கொல்லப்பட்டனர்.

எனினும் புலிகளின் தடைகள், தாக்குதல்களையும் மீறிப் பதினைந்தாயிரம் வரையான சனங்கள் இராணுவத்தின் பக்கம் சென்றனர். சனங்கள் தொடர்ந்து தம்மிடம் வருவதை ஊக்கப்படுத்தும் நோக்கில் படைத்தரப்பு மேலும் மேலும் சனங்களின் மீதே தனது இலக்கை நிர்ணயித்தது. இது மிகக் கேவலமானதும் கொடூரமானதும் மன்னிக்க முடியாததுமான நடவடிக்கை.

ஆனால், இதை மறைத்துக் கொண்டு வெற்றிகரமாகப் படையினர் புதிய பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டதாகவும் சனங்களை மனிதாபிமான நடவடிக்கை மூலம் மீட்டதாகவும் படைத்தரப்பும் அரசும் பிரச்சாரம் செய்தன. இதில் இன்னும் கொடுமையானது பாடசாலைகளிலும் தற்காலிகமாக அவசர நிலையில் இயங்கிய மருத்துவமனைகள் மீதும் படையினர் நடத்திய தாக்குதல்கள். காயப்பட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களையும் காப்பாற்றுவதற்கு முடியாது என்ற நிலை பயங்கரமாகியது.

தொடரும்...

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்தியா ஜேவிபியை அழைத்து பேசியதும், சஜித் தலைமையிலான கட்சிக்கு பாதக நிலையையே ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் அந்தக்கட்சிக்கான வெளிநாட்டு உறவில் இன்னும் உத்வேகம் இல்லையென்ற குறையும் கூறப்படுகிறது. என்றாலும் அந்தக்கட்சி ஆட்சியமைத்தால் சீனாவைக் காட்டிலும் இந்தியாவுடன் இணைந்து செல்லவேண்டிய நிலையை தவிர்க்கமுடியாது. எனவேதான் தேசிய மக்கள் சக்தியை உத்தியோகபூர்வமாக அழைத்துப் பேசிய இந்தியா, சஜித் தரப்பை இன்னும் அழைக்கவில்லை. எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்புக்களையும் நிராகரிக்கமுடியாது.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் சீனாவைக்காட்டிலும் இந்தியாவின் செல்வாக்கு பாரியளவில் ஊடுருவிச் சென்று கொண்டிருக்கிறது. அத்துடன் இந்தியா, இலங்கையை பொறுத்தவரையில் எந்தவொரு அரசாங்கங்களினாலும் தவிர்க்கமுடியாத நாடு என்ற நிலையை எட்டிவிட்டது என்று கூறமுடியும். இதற்கு மத்தியில் ஜேவிபியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை இந்தியா முதல் தடவையாக உத்தியோகபூர்வமாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியமை, இரண்டு தரப்புக்கும் நன்மை பயக்கும் செயற்பாடாகவே கருதப்படுகிறது. இதன் மூலம் தாம் இலங்கையில் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஜேவிபியின் நேரடி எதிர்ப்பை இந்தியாவினால் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

மறுபுறத்தில் இந்தியாவின் உத்தியோகபூர்வ அழைப்பு என்ற அடிப்படையில் அந்த நாட்டுக்கு சென்று வந்ததன் மூலம், இதுவரை மூன்றாவது கட்சியாக கருதப்பட்ட ஜேவிபி இன்று இலங்கை அரசியலில் மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க கட்சி என்பதை பறைசாற்றிக்கொள்ள முடிந்துள்ளது. இந்தியாவுடன் கிடைத்த வாய்ப்பை அந்தக்கட்சியும் விரும்பி பிரசாரம் செய்வதன் மூலம் இதனை உணரமுடிகிறது.

எனவே தற்போதைய நிலையில் இலங்கையில் ஆழமாகக் காலூண்றிக் கொண்டிருக்கும் இந்தியா, இலங்கையின் முக்கியமான கட்சிகளின் செல்வாக்கை தம்வசம் தக்கவைத்துள்ளது. எனவே மாலைத்தீவைப் போன்று மீண்டும் இலங்கை, தனித்து சீனாவின் ஆதரவு நாடாக மாறமுடியாத சூழ்நிலையை அந்த நாடு உருவாக்கியுள்ளது எனலாம்.

# நெடுந்தீவின் வரலாற்று தொன்மையும் சுற்றுலாத்துறையும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

**மக்கள் குடியேற்றம்**

நெடுந்தீவில் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதும், மக்கள் வாழக்கூடிய வசதிகள் இங்கு இருந்தன என்பதும் அங்கு கண்டெடுக்கப்பட்ட 2000 ஆண்டு பழைய கறுப்பு சிவப்பு மட்பாண்ட பாத்திரங்கள், உரோமர் கால நாணயங்கள், கல்லாலான கருவிகள், இடிந்த பண்டைக்கால வீட்டுச் சுவர்கள் என்பவற்றாலும், இங்கு பண்டைக்காலம் முதலாக மக்கள் வாழ்ந்து வந்தமையை அறியக் கூடியதாகவுள்ளது.

மக்கள் குறைந்த இடங்களில், தென் இந்தியாவிலிருந்து மக்களைக் கொணர்ந்து யாழ்ப்பாண அரசர்கள் குடியேறச் செய்தபொழுது, நெடுந்தீவிலும் குடியேற்றினார்கள் என அறிய முடிகிறது. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே வெடியரசன் நெடுந்தீவையே இராசதானியாகக் கொண்டு, கோட்டை கட்டி, பிரதானிகள் சகிதம் ஆட்சி செய்தமையும் நெடுந்தீவில் மக்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

சிங்கை ஆரியன் என்னும் மன்னன், புவனேகபாகு என்னும் மந்திரியுடனும், பரிவாரங்களுடனும் யாழ்ப்பாணம் வந்து நல்லூரை தலைநகராகக் கொண்டு கி.பி. 950 வரையில் ஆட்சி செய்தான். முதல் ஆரியச் சக்கரவர்த்தியான இவன் மனுநீதி வழுவாது ஆட்சி செய்து வருங்காலத்தில் குடிசனம் குறைந்த இந்நாட்டிலே அனேக பிரஜைகள் வாசம் செய்ய வேண்டுமென்று ஓர் நாள் மந்திரியாகிய புவனேகபாகுவுடன் ஆலோசனை செய்து இங்கும் சில தமிழ்க் குடிகளைக் குடியேற்ற வேண்டுமென்று, இந்தியத் தமிழ் அரசர்களுக்கு கடிதம் அனுப்பினான். அத்தமிழ் அரசர்கள் இவனது வேண்டுகோளுக்கிசைந்து சிற்சில இடங்களிலிருந்து தமிழ்க் குடிகளை அனுப்பி வைத்தனர் அவர்கள் தங்கள் அடிமை, குடிமைகளுடன் யாழ்ப்பாணம் வந்தனர். இவர்களில் இந்தியாவிலிருந்து வந்த பிரபுக்களை அவரவர் அடிமை குடிமைகளுடன் திருநெல்வேலி, மயிலிட்டி, தெல்லிப்பழை, இணுவில், பச்சிலைப்பள்ளி, புலோலி, தொல்புரம் கோயிலாக்கண்டி, இருபாலை போன்ற இடங்களுக்கு அதிபதிகளாக்கிக் குடியமர்த்தினான்.

இவர்களுடன் வந்த பிரபுவான சேயூர் வேளாளனும், இந்திரனைப் போன்ற செல்வனும், நீதி, பொறுமை ஆகிய நற்குணங்களையுடையவனும், வாசனை பரிமளிக்கும் குவளை மாலை தரித்த மார்பனும் மிகுந்த கீர்த்திப்பிரதாபனும், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனும் ஆகிய தனிநாயக முதலியை அவரது பரிவாரங்களுடன் நெடுந்தீவிற்கு அதிபதியாக்கினான்.

இவ்வரலாறு பற்றி யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலிலும், யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. தனிநாயக முதலியின் பரம்பரையினரே ஏனைய தீவுகளுக்கும் அதிபதியாக்கப்பட்டனர் என்றும் இங்கிருந்தே ஏனைய தீவுகளுக்கும் மக்கள் சென்று குடியேறினர் என்றும் அறியக்கிடக்கின்றது. இதனால் தான் இன்றும் நெடுந்தீவு மக்களுக்கும் ஏனைய தீவு மக்களுக்கும் இடையே மொழி, சமயம், கலை, கலாச்சாரப் பண்புகள் ஒத்தனவாகவே காணப்படுகின்றன.

**தொடரும்...**

**தொகுப்பு** - Kanthasamy Kirikaran

08ஆம் பக்கத் தொடர்ச்சி...

அந்த நிலை தற்போதும் உள்ளது. அதனால் எமது இளம் சமூகத்தினருக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். அதனை செய்ய வேண்டிய பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்துள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும். அதனைவிடுத்து சில அரசியல் குழுக்கள் பழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும். இவ்விடத்திலிருந்து முன்னேறிச் செல்வதற்கு புதிய வலுவான பொருளாதாரத்திற்கு நாம் மாற வேண்டும். அதற்கான பொருளாதார மாற்றச் சட்டம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும். அதற்குரிய புதிய நிறுவனத்தையும் உருவாக்க வேண்டும். அரசியல் அபிலாஷைகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண்கதை பேசி எம்மால் முன்நோக்கிச் செல்ல முடியாது. மாறாக எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த மாற்றத்தைக் குறுகிய காலத்தில் செய்துவிட முடியாது. அதற்காக நீண்ட கால முயற்சியும் அர்ப்பணிப்பும் அவசியப்படும். அதே பாதையில் தொடர்ந்து சென்றால் 2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறலாம். எந்த நெருக்கடிக்கும் குறுகிய கால தீர்வுகள் இல்லை. இரண்டு நாட்களில் எந்த இலக்கையும் அடைய முடியாது. புத்த பெருமான் ஞானம் பெறுவதற்காக மிக நீண்டகாலம் ஆனது. ஞானம் பெற்ற பின்னரும் அவர் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதனைப் புரிந்து கொண்டு நாம் நிதானமாகவும் திட்டமிடலுடனும் முன்னேறிச் செல்ல வேண்டும். ஆரம்பத்தில் புத்தரின் பிரசங்கம் ஒன்றைக் கூறினேன். புத்தரின் பிரசங்கத்திற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, கிறிஸ்துவுக்கு முந்தைய ஐநூறாம் ஆண்டுகளில் சீனாவில் வாழ்ந்த தத்துவஞானி கன்பூசியஸ் என்பவர்" உலகைக் கட்டியெழுப்ப முதலில் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தேசத்தை கட்டியெழுப்புவதற்கு முன் குடும்பத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். குடும்பத்தைக் கட்டியெழுப்பும் முன்னதாக எமது தனிப்பட்ட வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு முன்னதாக எமது மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்." என்று கூறியுள்ளார்.

எனவே, இந்த சபையில் உள்ள அனைவரும் முதலில் மனதைத் தயார்படுத்திக்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க, அவர்களுக்கான சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப, நாம் அனைவரும் சரியான பாதையில் செல்ல வேண்டும். அதற்காக நம் மனதைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை ஒற்றுமையுடன் எதிர்கொண்டால் மட்டுமே நமது பயணத்தைத் துரிதப்படுத்த முடியும். தமக்குக் கிடைக்கும் அந்தஸ்த்துகள் பற்றி கனவு காணும் சிலர், அந்த நாட்டை விடவும் பதவிகளை அதிகமாக நேசிக்கின்றனர். அந்த பதவிகளுக்காக நாட்டுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றனர். நாட்டையும் மக்களையும் ஏமாற்றுகின்றனர். நடைமுறையை உணராமல் கனவுப் பாதையில் செல்ல முற்படும் பட்சத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்ள நேரிடும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன். அதற்காக ஒற்றுமையாக கலந்துரையாடுவோம். நாங்கள் செயல்படுத்தும் முறையை விட சிறந்த மாற்று முறைகள் இருந்தால், அவற்றைக் கூறுங்கள். அவற்றை ஆழமாக ஆராய்வோம். அது குறித்தும் கலந்துரையாடுவோம். அவற்றில் நாட்டுக்குச் சிறந்ததென கருதப்படும் யோசனையைச் செயற்படுத்துவோம். அவ்வாறான பேச்சுக்களில் கலந்துகொள்ள நாம் தயாராகவே இருக்கிறோம். அவ்வாறான பேச்சுக்களுக்கு தயார் எனில், அந்தக் கலந்துரையாடல்களுக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதானிகளையும் அழைப்பிக்க முடியும்.

கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகள் தொடர்பில் இரு உதாரணங்களைக் கூற விரும்புகிறேன். 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் எழுத்தாளரும் பேச்சாளருமான எலன் கெல்லர் "தனியாக நாம் சில விடயங்களை மட்டுமே செய்ய முடியும். ஒன்று பட்டால் பல விடயங்களை செய்யலாம்." 19 ஆம் நூற்றாண்டில் மகாகவி பாரதியார் தனது நாடு பற்றி எழுதிய கவிதையொன்று நினைவிற்கு வருகிறது. அதனை சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன

"முப்பது கோடி முகமுடையாள்
உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள்
இவள் செப்பு மொழிபதி னெட்டுடையாள்
எனில் சிந்தனை ஒன்றுடையாள்"

அவ்வாறான எண்ணம் எமக்கு ஏன் வரவில்லை? பல்வேறு எண்ணங்கள் இருந்தாலும் பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தாலும், பல்வேறு பிரச்சினைகள், நம்பிக்கைகள் இருந்தாலும், பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு ஆதரவாக இருந்தாலும், எமது நாட்டிற்காகவும் அதன் எதிர்காலத்திற்காகவும் ஒருமித்த எண்ணத்துடன் ஒன்றுபட முடியாமல் இருப்பது ஏன்? எமது நாட்டு இளைய சமூகத்தின் எதிர்காலத்திற்காக ஒன்றுபட முடியாதிருப்பது ஏன்?

மீண்டும் - மீண்டும் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். பொது நோக்கத்துடன் ஒன்றுபடுங்கள். மாற்றத்தை நம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமக்கு நாமே ஒளியாவோம். இந்தச் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளில் பல தசாப்தங்களாக என்னை விமர்சித்தவர்களே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளனர். நாட்டின் நன்மைக்காகவும், இளையோரின் எதிர்காலத்திற்காகவும் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலானவர்கள் பழைய பகையை மறந்துவிட்டு ஒன்றுபட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் என்னுடன் பல காலமாக அரசியலில் ஈடுபட்டவர்கள். நான் அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர்களும் உள்ளனர். நாட்டுக்கான பொது பயணத்தில் இணைந்து கொள்ள பொதுஜன பெரமுனவால் முடியுமாயின் ஐக்கிய மக்கள் சக்தியால் அதனை செய்ய முடியாதிருப்பது ஏன்?

மக்கள் விடுதலை முன்னணி நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் எம்முடன் நெருக்கமாக செயற்பட்டது. ஊழல் ஒழிப்பு பிரிவின் அலுவலகத்திற்கு ஆனந்த விஜயபாலவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது. அவ்வாறிருக்க நாட்டின் பொது முன்னேற்றத்திற்கான பயணத்தில் இணைய முடியாதிருப்பது ஏன்? இந்தச் சபையில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்னுடன் இணைந்து பணியாற்றியுள்ளன. எனினும், நாட்டிற்காக இந்தக் கட்சிகளுக்கு பொதுப் பயணத்தில் ஏன் இணைந்துகொள்ள முடியாது. நாம் தேர்தலில் வெவ்வேறாக போட்டியிடுவோம். ஆனால் நாட்டின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் இணைந்துகொள்வோம்.

அதனால் நாட்டை முன்னேற்ற பொது நிலைப்பாட்டுடன் - பொதுவான எண்ணத்துடன் ஒன்றுபட முன்வாருங்கள் என மீண்டும் அழைப்பு விடுக்கிறேன். மாற்றத்தை எம்மிலிருந்து ஆரம்பிப்போம். எமது மனங்களைத் திருத்திக்கொள்வோம். எமக்கு நாமே ஒளியாவோம். நாம் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம். தனிப்பட்ட நோக்கங்களுக்காக அன்றி நாட்டின் பொதுக் கனவை நனவாக்க ஒன்றுபடுவோம். அடுத்த சந்ததியின் முன்னேற்றத்திற்காக ஒன்றுபடுவோம். எம்மீது சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களை நாம் நிறைவேற்றுவோம். பல்வேறு தனிப்பட்ட நோக்கங்களுக்காக, இந்த பொறுப்புக்களைப் புறக்கணித்தால் வரலாற்றில் நாம் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுவோம். அதனால் புதிய பயணத்தைத் தொடர்வோம். புதிய எதிர்காலத்தை, புதிய நாட்டை உருவாக்குவோம்.
வாருங்கள் ஒன்றுபட்டு நாம் புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்..!

# பசுமை எனும் பேரபாயம்

கடந்தவாரத் தொடர்ச்சி...

இயற்கையின் பல்வேறு கூறுகளை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்தும் கலை, கொலனித்துவத்திற்கு முந்தைய விவசாயத்தில் மிகவும் வளர்ந்தது. வயலின் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் சில சமயங்களில் மிகவும் எளிமையானவை. உதாரணமாக குளியல் நீர் மற்றும் பாத்திர நீர் பொதுவாக நெல் வயலுக்குச் சேகரிக்கப்படும். வயல்களின் எல்லையில் இலுப்பை மரங்கள் நடப்பட்டன. இந்த மரத்தின் பழங்களை வௌவால்கள் உண்ணும் அவை பழங்கள் பழுத்தவுடன் மரத்தைச் சுற்றிக் கூடுகின்றன. வௌவால்களின் எச்சத்தில் உள்ள நைட்ரஜன் வயல்களுக்கு உரமானது.

சில நேரங்களில் பசுந்தாள் உரம், சில மரத்தாலான அல்லது மூலிகைச் செடிகளின் இலைகள் பயன்படுத்தப்பட்டன. காய்கறிகளின் இலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. மேலும் தரிசு காலங்களில் கால்நடை மேய்ச்சல், மண் உற்பத்தியை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்கு வகித்தது. கூடுதலாக உருவாக்கப்பட்ட வேளாண் சுற்றுச்சூழல் அமைப்பு பாம்புகள், சிறிய பாலூட்டிகள் மற்றும் மீன்கள் போன்ற வளமான விலங்கினங்களைப் பராமரித்தது. இது உயிரியல் நிலைத்தன்மைக்கு கணிசமாகப் பங்களித்தது.

பல விவசாயிகளுக்கு நெல் வயல்களில் இருந்து கிடைக்கும் வருமானம் அரை வருடத்திற்கு மேல் நீடிக்கவில்லை. மேலும் அரிசிப் பற்றாக்குறையை ஈடுகட்ட, சேனைப் பயிர்ச்செய்கை மூலம் உலர் தானியப் பயிர்ச்செய்கை பரவலாக மேற்கொள்ளப்பட்டது. இந்த முறையின் கீழ் காய்கறிகள், பயறு வகைத் தாவரங்கள் மற்றும் பல்வேறு வகையான தானியங்கள் பயிரிடப்பட்டன. திட்டமிடப்பட்ட சுழற்சி முறையில் சேனைப் பயிர்ச்செய்கை செய்யப்பட்டது. சிறிய புதர்கள் மற்றும் மரங்களை நிலத்திலிருந்து அகற்றிய பிறகு, அது எரிக்கத் தயாராக இருந்தது. இந்த நேரத்தில் மக்கள் வேட்டையாடச் சென்று பழங்களையும் தேனையும் சேகரித்தனர்.

விதைப்பதற்கான விதைகள் வீட்டிலேயே தயாரிக்கப்பட்டன. மக்காச்சோளம், தினை, பச்சைப்பயறு, மிளகாய், மிளகு, பாக்கு, பூசணி, மரவள்ளிக்கிழங்கு, இஞ்சி ஆகியன இவற்றில் சில. அதன் பிறகு சிறிய குடிசைகள் கட்டப்பட்டன. பகல் நேரங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பயிர்களை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாத்துக் கண்காணித்தனர். இரவு நேரங்களில் ஆண்கள் குடிசைகளில் தங்கினர். இந்தக் காலம் மிகவும் உழைப்பு மிகுந்ததாக இருந்தது.

மண்ணின் உற்பத்தித்திறன் வேகமாகக் குறைந்து, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் பகுதியை விட்டு, வேறு இடத்தில் புதிய காடு எரிக்கப்படுகிறது. காடு மீண்டும் வளர்ச்சியடையலாம். மேலும் நிலத்தின் இருப்பைப் பொறுத்து விவசாயி பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதே நிலத்தில் பயிரிடுவார். மனித மக்கள் தொகை பெருகவில்லை மற்றும் வன இருப்பு போதுமானதாக இருந்தால் மட்டுமே அவர் அதைச் செய்வார். பயிர்ச்செய்கையின் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. சூழலியல் நம்பகத்தன்மைக்கு காட்டின் அளவு மற்றும் சுழற்சிக் காலங்களும் முக்கியமானவை. பயிர்ச்செய்கை முறைகள் முற்றிலும் வேறுபட்டவை என்பதை வெவ்வேறு தரவுகள் காட்டுகின்றன. 5 முதல் 25 ஏக்கர் வரையில் சேனைப் பயிர்ச்செய்கைக்கான நிலத்தின் விரிவாக்கங்கள் மற்றும் தரிசு காலங்களை (6 முதல் 15 ஆண்டுகள் வரை சுழற்சிக் காலங்களை) விவரிக்கும் குறிப்புகள் காணக் கிடைக்கிறது.

பண்டைய இலங்கையர்களுக்கு நெற்பயிர்ச்செய்கை என்பது வாழ்க்கைத் தொழில். தோட்டப் பயிர்ச்செய்கை என்பது வளமான இயற்கையின் நல்ல விஷயங்களைப் பெறுவது. குடும்பங்களுக்கு அன்றாடத் தேவைகள் பலவற்றையும் வீட்டுத்தோட்டம் வழங்குகிறது. பல நூற்றாண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட வற்றாத மரங்கள் கிராமவாசிகளின் வாழ்க்கையில் பல நன்மைகளுடன் சேர்ந்தன. தனி வீடுகள் கட்டப்பட்ட சிறிய வளாகத்தைச் சுற்றி மரங்கள் வளர்க்கப்பட்டன. பெரும்பாலான இனங்கள் காட்டு இனப்பெருக்கம் மூலம் முளைக்கின்றன அவை விவசாயிகளால் நடப்படுவதில்லை. நெல் வயல்கள் மற்றும் சேனைப் பயிர்ச்செய்கைக்குத் தீவிர உழைப்பு தேவைப்படுவதால், வீட்டுத்தோட்டம் தானே வளரவேண்டும். இருப்பினும், அமைப்பை வடிவமைக்க ஒரு சிறிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மர இனங்கள் இதற்குள் இணைக்கப்பட்ட விதம் தோட்டங்களுக்குத் தோட்டம் வேறுபட்டது.

தாவரங்களின் பன்முகத்தன்மை கொண்ட வெப்பமண்டலப் பகுதிகள் இந்த வீட்டுத் தோட்ட அமைப்புகளை நிறுவுவதற்கு சாதகமானதாக இருந்தது. இதை 'சோம்பேறி விவசாயம்' என்று நகைச்சுவையாக அழைத்தார்கள். நீங்கள் ஒரு விதையை துப்பினால், பெரும்பாலும் ஒரு மரம் வளரும். தோட்டத்தை பராமரிக்க அதிக உழைப்பு தேவையில்லை என்றாலும், பல்வேறு தாவரப் பயன்பாடுகள் மற்றும் தேவைகள் பற்றிய போதிய அறிவு அவசியம். இவ்வறிவு தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டது.

மலையுச்சிகளும் மத்திய மலைப்பகுதிகளும் அடர்ந்த காடுகளாக இருந்தன. பாசனத்தின் மீதான தாக்கம் காரணமாக, காடுகள் உற்பத்தி செய்யாத நிலமாக கருதப்படாமல் நீர் மற்றும் வளத்திற்கான ஆதாரமாக கருதப்பட்டது. இக்காடுகளில் இருந்து மருந்துகள், எரிபொருள் மற்றும் சிறு வனப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. உலர் வலயத்தின் மக்கள் செறிவான பகுதிகளில், அக்கிராமங்களுக்கு அருகிலுள்ள காடுகள் அவ்வாறே பேணப்பட்டன. பண்டைய காலத்தில் ஈர மண்டலத்தின் மழைக்காடுகள் பெரும்பாலும் தீண்டப்படாமல் இருந்தன.

பண்டைய நீர்வள நாகரிகத்தின் சரிவு 14 ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. இந்தியப் படையெடுப்புகள், மலேரியா மற்றும் உள்நாட்டு அரசியல் சிக்கல்கள் ஆகியன இணைந்து மேம்பட்ட விவசாய அமைப்பை அழித்தது. அன்றிலிருந்து பாரம்பரிய முறையான கிராமங்கள், குளங்கள் மற்றும் விவசாய நிலங்களை மீண்டும் நிறுவ முடியவில்லை.

கொலனித்துவத்திற்கு முந்தைய விவசாயம் மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டிருந்தது. முதலாவது முக்கிய கூறு விவசாயத்தின் பன்முகத்தன்மை. ஆண்டு முழுவதும் நிலையான உற்பத்தித்திறனை உத்தரவாதம் செய்யும் கூறுகளுக்கிடையேயான பல்வேறு தொடர்புகள் இருந்தன. இயற்கையான தாவரங்கள் பயிரிடப்பட்ட பகுதியாக மாற்றியமைக்கப்பட்டது. இது இன்னும் அதிக பன்முகத்தன்மை கொண்ட இனங்கள் மற்றும் வாழ்க்கை வடிவங்களை பராமரிக்கிறது. குடும்பத்தால் பயன்படுத்தப்படும் தாவர இனங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்தன. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பல்வேறு தொடர்புகள் பாரம்பரிய அறிவின் ஆழமான அமைப்பாக வளர்ந்தன. உற்பத்தி அமைப்புகளின் பன்முகத்தன்மை, நிலைத்தன்மை மற்றும் குறைந்தபட்ச ஆபத்தையே விளைவிப்பதை உறுதிப்படுத்துவது என்பவை முக்கியமான அம்சங்களாகின. நெல் அறுவடை தோல்வியடையும் போது மாற்றுப் பயிர்ச்செய்கை மற்றும் வீட்டுத்தோட்டம் மூலம் அது ஈடுசெய்யப்படும். பயிர்களின் பன்முகத்தன்மை அமைப்பு பூச்சிகளின் பாதிப்பையும் நோய்த்தொற்றைக் குறைக்கிறது. சுழற்சிச் செயல்முறைகள் பல பயன்பாடுகளை சாத்தியமாக்குகின்றன. பலவிதமான சூழலியல் சார்புநிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

இரண்டாவது கூறு, விவசாயத்தின் மீள்தன்மையும் நிலைத்தன்மையும். உயிரினங்களின் பன்முகத்தன்மை, கட்டமைப்பின் மாறுபாடு மற்றும் கூறுகளுக்கிடையேயான ஆற்றல் மிக்க தொடர்புகள் ஆகியவை மீள்தன்மையுடைய விவசாய - சுற்றுச்சூழல் அமைப்பில் விளைகின்றன. வறட்சி மற்றும் புயல் போன்ற வெளிப்புற அச்சுறுத்தல்களைத் தாங்கும் திறன் அதிகரிக்கிறது. வெப்பமண்டல சூழலுக்கு உணர்திறன் தழுவல், மண் வளத்தை பராமரிக்கிறது. அமைப்பின் பல்வேறு கூறுகளை பலமுறை பயன்படுத்துவதால் விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆபத்து மற்றும் நிலையான உற்பத்தி கிடைக்கும். பல்வேறு உற்பத்தி முறைகள் பூச்சிகள் மற்றும் நோய்களால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைக்கின்றன.

மூன்றாவது கூறு, சமூகத்தின் சுற்றுச்சூழல் நெறிமுறைகளாகும். விவசாய நடைமுறைகள் கிராம மக்களிடையே வலுவான ஒற்றுமையைக் கோரின. அனைத்துக் குடும்பங்களின் தலைவர்களைக் கொண்ட கிராம அமைப்பு ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தது. நீர் மற்றும் நில விநியோகம், சமூகப் பணிகள் மற்றும் விவசாய நாட்காட்டி ஆகியன அவ்வமைப்பாலேயே முடிவாகின. உழைப்பு பகிர்வால் மட்டுமே நெல் பயிர்ச்செய்கை செய்ய முடியும். எனவே பயிர்ச்செய்கையை வலுவான சமூக உறவுகளிலிருந்து பிரிக்க முடியாது. கிராம சமூகத்தில் அகிம்சை அல்லது உயிரைப் பறிக்காதிருத்தல் மனிதனுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையே சுரண்டாத உறவை ஊக்குவித்தது. மனிதர்கள் மற்றும் பிற வாழ்க்கை வடிவங்களை வளர்க்கும் ஒரு விவசாய முறையை நிறுவுவது போற்றத்தக்க ஒரு பண்பாட்டுச் செயன்முறையாக இருந்தது.

இவ்விடத்தில் பண்டைய விவசாய முறைகள் குறித்து அகழாய்வுக் குறிப்புகள் என்ன சொல்கின்றன என்பதை நோக்குவது முக்கியமானது. பல சுற்றுச்சூழல் மற்றும் சமூக - கலாச்சார குணாதிசயங்களை இந்திய தீபகற்பத்துடன் பகிர்ந்து கொண்டாலும், பல வழிகளில், இந்திய தீபகற்பத்தில் இருந்து பிரிந்து செல்லும் தொல்பொருள் மற்றும் வரலாற்றுப் பாதையை இலங்கை கொண்டுள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தின் பகுதியாக இலங்கையானது பல்வேறு காலகட்டங்களிலும், இந்தியப் பெருங்கடலின் பரந்த கடல்சார் வர்த்தக வலையமைப்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுடனான வர்த்தகத்திற்கானநுழைவாயிலாகஇலங்கை செயல்பட்டுள்ளதோடு கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடல் உலகங்களுடன் தொடர்பையும் கொண்டுள்ளது. தொல்பொருள் சான்றுகள் கிமு முதலாம் நூற்றாண்டில் இருந்து கடல் வர்த்தகம் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றன. இதே காலப்பகுதியில் நகர்ப்புற குடியேற்றங்கள், உள்நாட்டு வர்த்தக வலையமைப்புகள் தோன்றின. இலங்கையின் விவசாய, வாழ்வாதார, சுற்றுச்சூழல் தொடர்பில் மிகக்குறைவான அகழ்வாராய்ச்சிகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது பண்டைய இலங்கையின் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார உத்திகள் ஆகியவிரண்டையும் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலாமைக்குக் காரணமாகியுள்ளன.

இப்பின்புலத்தில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வை நோக்குவது பொருத்தம். இரண்டு ஆரம்பகால வரலாற்றுத் தளங்களான கிரிந்த மற்றும் கந்தரோடையின் சமீபத்திய அகழ்வாராய்ச்சியிலிருந்து பெறப்பட்ட தொல்பொருள் விதைகள் மற்றும் வரலாற்றுக்கு முந்தைய தாவரப் பயன்பாடும் வளர்ப்பும் (phytolith assemblages) ஆகிய இரண்டையும் சுற்றுச்சூழல் அணுகுமுறையைப் பின்பற்றி ஆய்வு செய்வதன் மூலம் சில முக்கிய விடயங்களைத் தெளிவாக்கலாம்.

இந்த ஆய்வானது, ஆரம்பகால வரலாற்றுக் காலத்தில் இலங்கையின் விவசாய மற்றும் சூழலியல் கடந்த காலத்தைப் பற்றிய புதிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. கந்தரோடை, பிற ஆரம்பகால இலங்கை நகர மையங்களுக்கு இணையான பொருளாதார மற்றும் நகரமயமாக்கப்பட்ட வளர்ச்சியைக் கொண்டுள்ளது. கந்தரோடையின் பைட்டோலித் சான்றுகள் தினை மற்றும் நெற்பயிர்கள் பதப்படுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இங்கு இவை உற்பத்தி செய்யப்பட்டது மட்டுமன்றி பிற தேவைகளுக்காகப் பதப்படுத்தப்பட்டும் உள்ளன. இச்சான்றுகள் கந்தரோடையில் பாசன அரிசி இருந்ததாகக் கூறுகிறது. அதேசமயம், கிரிந்தவில் நெல் பதப்படுத்தியதற்கான சான்றுகள் உள்ளன. கிரிந்தவில் மானாவாரியில் பயிர்ச்செய்கை இடம்பெற்றிருக்கலாம் என்றும் இவ்வாய்வு கூறுகிறது. இலங்கையின் ஆரம்பகால வரலாற்றுக் காலத்தில், கிரிந்த மற்றும் கந்தரோடை ஆகிய இரண்டிலும் அரிசி, தினைகள் மற்றும் பலவகையிலான பருப்பு வகைகள் பயிரிடப்பட்டதைக் காணமுடிகிறது என்று இவ்வாய்வு சொல்கிறது.

### கொலனிய இலங்கையில் சூழலியல்

14ஆம் நூற்றாண்டில் உலர் வலயத்தின் கடைசித் தலைநகரான பொலனறுவையின் சிதைவு, அதன் பின்னர் ஒருபோதும் மீளமைக்கப்படாத நீர்ப்பாசன முறையின் சிதைவாகியது. நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக்கொண்ட பிற நாகரிகங்களும் இதே காலகட்டத்தில் சரிந்தன என்பது வியக்கத்தக்கது. கம்போடியா, வடக்கு - தாய்லாந்து மற்றும் போர்னியோவில் உள்ள பாகன் ஆகியவை சில உதாரணங்களாகும். அந்த நாடுகளில் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட மலேரியாவின் பரவல் ஒரு இணையான நிகழ்வாகும். இது நீர்ப்பாசன முறைகளின் அலட்சியத்தால் மோசமாகியது. இந்த பண்டைய கலாசாரங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி ஒரு சிக்கலான செயல்முறையாகும்.

பாரம்பரிய மற்றும் மிகவும் வளர்ந்த விவசாய முறை ஏற்கனவே சிதைந்த பின்னரே கொலனியாதிக்கம் இலங்கையில் தங்கள் செல்வாக்கை செலுத்தியது என்பதை குறித்துக் கொள்வது முக்கியமானது. நாட்டின் தென்மேற்கு மற்றும் மலைப்பகுதிகளை நோக்கிய நகர்வானது அரசியல் உறுதியற்ற தன்மையையும் பொருளாதார மாற்றத்தையும் கொண்டு வந்தது. விவசாய நடவடிக்கைகளில் சரிவு ஏற்பட்டது. புதிய பொருளாதார திசைகளுக்கான வாய்ப்புகள் உருவாகின.

தொடரும்...

மீநிலங்கோ தெய்வேந்திரன்

# மனநிலை பாதிப்பால் பெண்களுக்கு ஏற்படும் பசியின்மை நோய்



(தொகுப்பு: பைஷல் இஸ்மாயில்)

பெண்களுக்கு அதிகமாக ஏற்படுகின்ற நோய்களின் வரிசையில் பல நோய்கள் இருந்தாலும், குறிப்பாக "மனநிலை பாதிப்பால் அவர்களுக்கு ஏற்படும் பசியின்மை" நோய் பெரும்பாலும் பெண்களுக்கு ஏற்படுகிறது.

குறிப்பாக விடலைப் பருவம் என்று சொல்லக்கூடிய பெண்களுக்கு ஏற்படுகிறது. இந்த நோய் ஆண்களுக்கு மிகவும் அபூர்வமாக ஏற்படும்.

அதேபோல் சில நேரங்களில் இந்த நோய் வயது முதிர்ந்த பெண்களுக்கும் ஏற்படலாம். இது பெரும்பாலும் உயர்மட்டத்திலுள்ள பெண்களுக்கு ஏற்படுகிறது. அவர்கள் மிகவும் குறிக்கோள் உடையவர்களாகவும், நேரத்திற்கு பணி புரிபவர்களாகவும், தொழிலில் பயபக்தி உடையவர்களாகவும் இருப்பார்கள்.

## எதனால் ஏற்படுகிறது?

உடலை மிகவும் ஒல்லியாக வைத்துக்கொள்ள இளம் வயது பெண்கள் முனைவதே இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. சிலர் ஏற்கனவே குண்டாக இருப்பார்கள். இவர்கள் மெலிய நினைத்து பசியைத் தவிர்த்து உணவை தள்ளி விடுவார்கள். சில பெண்கள் பருவமடைந்ததும் உடற்பருமன் கூடிவிடும் என்ற பயத்தில் உணவை வெறுத்து ஒதுக்கி விடுவார்கள்.

இந்த நோயினை மனநோய்களிலும், உணவு தொடர்பாகத் தோன்றும் நோய் வகையிலும் வைத்தியர்கள் சேர்த்துள்ளனர். இவர்களின் எடை குறைந்து விடும். இவர்கள் தொடர்ந்து உணவு உண்ணாமையினால் அவர்களின் உடலில் பல்வேறு ஹோர்மோன் குறைபாடுகளும் ஏற்படும்.

## நோய் அறிகுறிகள்

ஒரு பெண்ணின் உடலின் எடை இருக்கவேண்டிய எடையிலிருந்து குறைந்த பட்சம் 25 சதவிகிதம் குறைந்து விடும்.

பெண்களுக்கு சரியான உணவும் சத்துக்களும் கிடைக்காததால் இவர்களுக்கு மாதா மாதம் வெளியேறும் மாதவிடாய் நின்று விடும். குறைந்தது 3 மாதங்கள் இவர்களுக்கு தீட்டு படாமல் இருக்கும். திருமணமான பெண்ணாக இருப்பின் தீட்டு நின்றுவிட்டால் "கர்ப்பம்" என்று நினைத்துவிடக்கூடாது. மாதவிடாய் சரிவர போகாமல் இருப்பதற்கும், நிற்பதற்கும் உணவும் ஒரு முக்கிய காரணம் என்பதை இவர்கள் கண்டிப்பாக அறியவேண்டும்.

இதேபோன்று விடலைப் பருவத்திலுள்ள ஆண்களுக்கு இந்த நோய் ஏற்பட்டால் அவர்களிடம் சாதாரணமாக இந்த வயதில் தோன்றக்கூடிய "பாலின உணர்ச்சி" எதிர்பாலினத்தார் மீது ஏற்படும். கவர்ச்சி ஆகியவை குன்றிவிடும். அதனால் அவர்களின் உடல் எடை குறைந்து வலுவிழந்து காணப்படுவார்கள் .

மேலும், இதயத்துடிப்பு குறைந்து விடும். இரத்த அழுத்தம் குறைந்து விடும். உடலின் பகுதிகளில், குறிப்பாக கை, கால் பகுதிகளில் நீலம் பூக்கும். உடலியலைக் குறித்தும், பாலியலைக் குறித்தும் ஆசையும், எண்ணமும் ஏற்படாது. மனது பக்குவப்படாத நிலையில் இருப்பார்கள்.

மேற்கூறிய அறிகுறிகளை வைத்தும், உடல் மெலிவதற்கும், மாதவிடாய் நின்றுபோவதற்கும் வேறு காரணங்களும் இல்லாததை பரிசோதனையின் மூலம் அறிந்து கொண்டு, குறிப்பிட்ட பெண்ணிற்கு இந்த நோய்தான் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

## இந்த நோய் குணமாகுமா?

இந்த நோயினை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை செய்துவிட்டால், பெரும்பாலான நோயாளிகளை காப்பாற்றிவிட முடியும்.

## இந்த நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எவ்வாறு?

இந்த நோயை கண்டு பிடித்தவுடன் முதலில் நோயாளியின் மனதிலுள்ள பல்வேறு தவறான எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும். பெரிய மனுஷியாகி விடுவோமோ? அடுத்து என்ன நேரப் போகிறதோ? என்பன போன்ற எண்ணங்களை எல்லாம் விட்டுவிட வேண்டும்.

இதேபோன்றே நோயாளியின் பெற்றோருக்கு இது தொடர்பான விழிப்புணர்வு தகவல்களை முறையாக வழங்கவேண்டும். நோயாளிகள் மறந்தாலும் இவர்கள் மறக்காது அவர்களுக்கு தகுந்த நேரத்தில் உணவு கொடுக்க வேண்டும். அதுவும் சத்தான உணவுகள், விற்றமின், தாது உப்புகள் எல்லாம் நோயாளியின் உடலின் எடைக்கும், வயதிற்கும், வேலை செய்யும் தன்மைக்கும் ஏற்ப கொடுக்க வேண்டும்.

தகுந்த நேரத்தில் உணவு உண்ணாமையினால் ஏற்படும் பின்விளைவுகளையும், விபரீதங்களையும் இவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இவர்களின் வயதிற்கும், உயரத்திற்கும் ஏற்ற எடை அதிகரிக்க முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும். படிப்படியாக உடல் எடை கூடி வருமாறு உணவு கொடுக்கப்படவேண்டும். இவர்கள் உணவு உண்ட பின்பு வாந்தி எடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டிலும், சுற்றுப்புறத்திலும், நண்பர்களிடத்திலும் சுமுகமான உறவு ஏற்படவும், சந்தோஷமான சூழல் நிலவவும் முன் ஏற்பாடுகள் செய்திடல் வேண்டும்.

டாக்டர் முத்துச் செல்லக்குமார் - MD.



# விளையாட்டுச் செய்திகள்

## வீராங்கனைகளுக்காக சிறப்பு ஏற்பாடு

பாரிஸில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்போட்டிகளில் கலந்து கொள்ளும் பாலூட்டும் விளையாட்டு வீராங்கனைகளுக்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரான்ஸ் ஒலிம்பிக் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், 2024ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக்போட்டிகள் நடைபெற உள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளும், தாய்ப் பாலூட்டும் விளையாட்டு வீராங்கனை களுக்காக சிறப்பு ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரபல பிரெஞ்சு ஜூடோ நட்சத்திர வீராங்கனையான கிளாரிஸ் அக்பெக்னெனோ. (Clarisse Agbegnenou) விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும், சமீபத்தில் தாயான விளையாட்டு வீராங்கனைகளுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கைக்கமைய, தாய்ப்பாலூட்டும் பிரான்ஸ் நாட்டு விளையாட்டு வீராங்கனைகளுக்காக, விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும் இடத்திற்கு சற்று தொலைவில் உள்ள ஹொட்டல்களில் அறைகள் ஒதுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட அறைகளில் அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் தங்குவதுடன், அவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் நேரத்தில், பிள்ளைகளுடைய தந்தைகள் அந்த அறைகளில் தங்கி பிள்ளைகளை கவனித்துக்கொள்ளலாம் என பிரான்ஸ் ஒலிம்பிக் குழுவின் செயலாளர் ஜெனரலான ஆஸ்ட்ரிட் குயார்ட் (Astrid Guyart) தெரிவித்துள்ளார்.

குடும்பங்களுக்காக ஒதுக்கப்படும் மொத்தச் செலவு சுமார் 40,000 யூரோக்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒலிம்பிக்போட்டிகள் ஜூலை 26 முதல் ஒகஸ்ட் 11 வரையிலும், பராலிம்பிக் போட்டிகள் ஒகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 8 வரையிலும் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிர்ச்சியில் பிரான்ஸ் கால்பந்து நட்சத்திரம்




நான்கு ஆண்டுகள் கால்பந்து விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது வருத்தமாகவும் அதிர்ச்சியாகவும் காயப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளதாக பிரான்ஸ் கால்பந்து நட்சத்திரம் பால் போக்பா தெரிவித்துள்ளார். ஜுவென்டஸ் அணியின் மிட்ஃபீல்டரான 30 வயது பால் போக்பா ஊக்கமருந்து பயன்படுத்திய விவகாரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டார்.

தற்போது அந்த விவகாரம் உறுதி செய்யப்பட்டு அவருக்கு நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இது தமக்கு அதிர்ச்சியளிப்பதாக குறிப்பிட்டுள்ள போக்பா, தாம் இதுவரை உருவாக்கிய அனைத்தும் தம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். தற்போதைய தடைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய இருப்பதாகவும் போக்பா தெரிவித்துள்ளார். கடந்த ஆகஸ்ட் 20ம் திகதி ஜுவென்டஸ் அணியின் முதல் ஆட்டத்திற்கு பின்னர் போக்பா வாடிக்கையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அந்த சோதனையில் டெஸ்டோஸ்டிரோன் அளவு அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டது. இதனையடுத்து உரிய அதிகாரிகளால் நான்கு ஆண்டுகள் இடைநீக்கம் பரிந்துரைக்கப்பட்டது.

ஆனால் இந்த தீர்ப்பு முறையல்ல என்றும், தாம் தெரிந்தோ திட்டமிட்டோ ஊக்கமருந்து எடுத்துக்கொள்ளவில்லை என்றும் போக்பா தெரிவித்துள்ளார்.

குறித்த தடை உத்தரவால் இனி 2027 வரையில் போக்பா கால்பந்து விளையாட முடியாத சூழல் உருவாகியுள்ளது.

## விரக்தியில் வெளியேறிய வில்லியம்சன்




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் நியூசிலாந்து அணி 179 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது. பேசின் ரிசர்வ் மைதானத்தில் நடந்து வரும் டெஸ்டில், அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 383 ஓட்டங்கள் குவித்தது. முதல் நாள் முடிவில் 9 விக்கெட்டுக்கு 279 ஓட்டங்கள் எடுத்திருந்த அவுஸ்திரேலியா, தனது ஆட்டத்தை தொடர்ந்தது.


ஹேசல்வுட் நங்கூரம்போல் நின்று ஆட, கேமரூன் கிரீன் (Cameron Green) சிக்ஸர்களை பறக்கவிட்டார். அவர் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 174 ஓட்டங்கள் குவித்தார். இதில் 5 சிக்ஸர், 23 பவுண்டரிகள் அடங்கும். மேட் ஹென்றி 5 விக்கெட்டுகளும், வில்லியம் ஓரௌர்கே மற்றும் கு.கெலேஜின் தலா 2 விக்கெட்டுகளும், ரச்சின் ரவீந்திரா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்சை தொடங்கியது. லாதம் 5 ஓட்டங்களில் இருந்தபோது ஸ்டார்க் பந்துவீச்சில் போல்ட் ஆனார். அடுத்து களமிறங்கிய கேன் வில்லியம்சன் ஒரு ரன் எடுக்க ஓடியபோது, சக அணி வீரர் வில் யங் அவர் மீது மோதியதில் நிலைதடுமாறினார். இதனால் லபுஷேன் எளிதாக அவரை ரன் அவுட் செய்தார். வில்லியம்சன் டெஸ்ட் கிரிக்கெட்டில் ரன் அவுட் ஆவது 12 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாகும். அவர் ரன் எடுக்காமல் விரக்தியுடன் வெளியேறினார்.

அடுத்து வில் யங் 9 ஓட்டங்களில் மார்ஷ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து நியூசிலாந்தின் விக்கெட்டுகள் சரியத் தொடங்கின. கிளென் பிலிப்ஸ் அதிரடியாக 70 பந்துகளில் 13 பவுண்டரிகளுடன் 71 ஓட்டங்கள் எடுத்தார். அதன் பின்னர் கடைசி விக்கெட்டாக வெளியேறிய மேட் ஹென்றி, 34 பந்துகளில் 4 சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 42 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில் நியூசிலாந்து அணி 179 ஓட்டங்களுக்கு சுருண்டது. நாதன் லயன் 4 விக்கெட்டுகளும், ஹேசல்வுட் 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர். அடுத்து 204 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணி, 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 13 ஓட்டங்கள் எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## வணிந்து தலைமையில் இலங்கை அணி




வங்கதேச டி20 தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை, வங்கதேச அணிகளுக்கு இடையேயான டி20 தொடர் வருகின்ற மார்ச் 4-ம் திகதி தொடங்கவுள்ளது. இலங்கை கிரிக்கெட் அணி வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து 3 டி20, 3 ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் கொண்ட நீண்ட தொடரில் விளையாடுகிறது.

இந்நிலையில், டி20 தொடருக்கான 17 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு வணிந்து ஹசரங்க அணித்தலைவராகவும், சரித் அசலங்க துணைத்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை கிரிக்கெட்டின் மூத்த வீரரான ஏஞ்சலோ மேத்யூஸ், குசால் பெரேரா உள்ளிட்ட வீரர்களும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

**அணி விபரம்:**
வணிந்து ஹசரங்க, சரித் அசலங்கா, அவிஷ்க ஃபெர்னாண்டோ, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா, ஏஞ்சலோ மேத்யூஸ், தசுன் ஷனக, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம கமிந்து மெண்டிஸ், மஹீஷ் தீக்ஷன, அகில தனஞ்சய, நுவான் துஷார, மதீஷா பத்திரனா, பினுர ஃபெர்னாண்டோ, ஜெப்ரி வான்டர்சே, தில்ஷன் மதுஷன்ங்கா.

## ஹொக்கி பயிற்சியாளர் இராஜினாமா

இந்திய ஹொக்கி அணியில் மற்றொரு அதிர்ச்சிகர சம்பவம் நிகழ்ந்துள்ளது. பெண்கள் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஜான்னேக் ஸ்கோப்மேன் (Janneke Schopman) பதவி விலகிய இரண்டு நாட்களுக்குப் பிறகு தலைமை நிர்வாக அதிகாரி எலைனா நார்மனும் (CEO Elena Norman) இராஜினாமா செய்துள்ளார்.

எலைனா நார்மன் பல மாதங்களாக சம்பளம் தராததால் இராஜினாமா செய்தார்.



அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த எலைனா, ஹொக்கி இந்தியா அணியின் பயிற்சியாளராக 13 ஆண்டுகள் பணியாற்றியவர். ஆனால், கடந்த மூன்று மாதங்களாக அவருக்கு சம்பளம் கிடைக்கவில்லை. மேலும், சில நாட்களாக ஹொக்கி இந்தியாவின் செயல்பாடுகளால் எலைனா அதிருப்தியில் உள்ளார். அதுமட்டுமின்றி உரிய நேரத்தில் சம்பளம் வழங்கப்படுவதில்லை. இதன் மூலம், அவர் இறுதியாக தலைமை நிர்வாக அதிகாரி பதவியை ராஜினாமா செய்தார். எலினாவின் ராஜினாமாவை ஹொக்கி இந்தியா தலைவர் திலீப் துர்கி ஏற்றுக்கொண்டார்.

ஹொக்கி இந்தியாவிற்கு எலினாவின் சேவைகளை திலீப் பாராட்டினார். எலைனாவின் அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் இந்திய ஹொக்கியின் போக்கையே மாற்றியது. இவரது பதவிக்காலத்தில் இந்திய ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் சிறந்த தரவரிசையை எட்டின. எலைனா 12-13 ஆண்டுகள் கடினமாக உழைத்தார். அதற்கு நன்றி என்று திலீப் துர்கி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# உலக வலம்

## முன்னாள் பிரதமர் பிறயன் முல்றொனி காலமானார்



கனடாவின் முன்னாள் பிரதமர் பிறயன் முல்றொனி தனது 84ம் வயதில் காலமானார். கனடாவின் 18ம் பிரதமராக முல்றொனி கடமையாற்றியுள்ளார்.

குபெக் மாகாணத்தின் Baie Comeauல் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பமொன்றில் முல்றொனி பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னாள் பிரதமர் ஜோன் டெபின்பேர்க்கரின் ஆலோசகர் என்ற அடிப்படையில் முல்றொனி தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார்.

1983ம் ஆண்டு கொன்சர்வடிவ் கட்சியின் தலைவராக தெரிவாகிய முல்றொனி, 1984ம் ஆண்டில் கனடாவின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். முல்றொனி தனது பதவிக் காலத்தில் நாட்டில் பல்வேறு மாற்றங்களை செய்தவர் என புகழாரம் சூட்டப்பட்டுள்ளது. சிறுபான்மை சமூகங்களுக்கு நீதி வழங்கும் விவகாரத்தில் முல்றொனி சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தார் என பாராட்டப்படுகின்றது.

## அமெரிக்க அதிபரின் உடல் நிலை குறித்து வெளியான அறிக்கை



அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் உடல்நலம் குறித்து வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் (81) தனது வருடாந்திர மருத்துவ பரிசோதனைகளை (annual physical) செய்து கொண்டார்.

"வால்டர் ரீட் நேஷனல் மிலிட்டரி மெடிக்கல் சென்டர்" (Walter Reed National Military Medical Centre) எனும் மருத்துவ மையத்தில் ஜோ பைடனுக்கு மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றன.

இந்நிலையில் அதில் அவரது பிரத்யேக மருத்துவரான டாக்டர். கெவின் ஓ"கொனார் (Dr. Kevin O'Connor) தனது குறிப்பை இணைத்துள்ளார். அந்த குறிப்பில், "ஜோ பைடன் பூரண உடல்நலத்துடன் உள்ளார். அவரால் அவரது அனைத்து கடமைகளையும் எந்த சிக்கலோ, விதிவிலக்குகளோ அல்லது சிறப்பான உதவிகளோ இன்றி தானாகவே வழக்கமான முறையில் செய்ய முடியும். நரம்பு மண்டலம் அல்லது நினைவாற்றலை பாதிக்கும் நோய்கள் ஏதும் இருப்பதற்கான அறிகுறிகளே இல்லை. ஓய்விலும், செயலாற்றும் போதும் அவருக்கு எந்த விதமான உடல் நடுக்கங்களும் இல்லை" என மருத்துவர் கெவின் பதிவிட்டுள்ளார்.

அதேசமயம் தனது மருத்துவ பரிசோதனை முடிந்ததும் ஜோ பைடன், "நான் மிகவும் இளமையுடன் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். சென்ற வருடத்தை விட ஏதும் மாறி விடவில்லை. அனைத்தும் சிறப்பாக உள்ளது" என தெரிவித்தார்.

ஆண்டுதோறும் அமெரிக்க அதிபர்களுக்கு நடக்கும் மருத்துவ பரிசோதனைகளுடன் அவர்களது மருத்துவர்கள் தரும் குறிப்பை பொதுவெளியில் அறிக்கையாக தருவது அமெரிக்க வெள்ளை மாளிகையால் நீண்டகாலமாக கடைபிடிக்கப்படும் ஒரு மரபாகும். இந்நிலையில் அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் வயதான அதிபர் ஜோ பைடன் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவீடன் நேட்டோவில் இணைய ஒப்புதல்

நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேர்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷிய அதிபர் புதின் உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கையை தொடங்கினர். இதனிடையே கடந்த ஆண்டு பின்லாந்து நேட்டோ அமைப்பில் சேர்ந்தது. தொடர்ந்து சுவீடனும் நேட்டோ அமைப்பில் இணைய நேட்டோ நாடுகள் ஒப்புதல் அளித்தன.

இதில் ஹங்கேரி அரசு மட்டும் நீண்ட காலமாக ஒப்புதல் அளிக்காமல் இருந்து வந்த நிலையில், தற்போது நேட்டோ அமைப்பில் சுவீடன் இணைவதற்கு ஹங்கேரி நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் உள்ள நாடாளுமன்றத்தில் இதற்கான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில், சுவீடன் இணைவதற்கு ஆதரவாக 188 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். 6 பேர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர்.



## இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் - 30,000ஐ கடந்த உயிரிழப்பு



இஸ்ரேல் - ஹமாஸ் இடையில் யுத்தம் ஆரம்பித்த பின்னர் காஸாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30,000 ஐ கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவலை காஸாவிலுள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய தாக்குதல்களையடுத்து, பலஸ்தீனத்தின் காஸா பிராந்தியம் மீது இஸ்ரேலியப் படைகள் கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இத்தாக்குதல்கள் ஆரம்பித்த பின்னர் காஸாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 30,000 ஐ கடந்துள்ளது என காஸாவிலுள்ள சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரை 30,035 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 70457 பேர் காயமடைந்துள்ளனர் என அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காஸாவின் அல் ஷிபா நகரிலுள்ள வைத்தியசாலையில், மந்தபோஷாக்கு, நீரிழப்பு மற்றும் பட்டினி காரணமாக 6 சிறார்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் மரணங்களைத் தடுப்பதற்காக சர்வதேச ஸ்தாபனங்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என காஸா சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா கோரியுள்ளார்.

## சோனி நிறுவனத்தின் அதிரடி நடவடிக்கை

ஜப்பானைச் சேர்ந்த முன்னணி மின்சாதன தயாரிப்பு நிறுவனமான சோனி, அதன் ப்ளே ஸ்டேஷன் பிரிவில் பணியாற்றிய 900 பேரை பணி நீக்கம் செய்துள்ளது. லண்டனில் உள்ள அலுவலகத்தையும் மூட முடிவு செய்துள்ளது சோனி.

வீடியோ கேம் துறையே ஒட்டுமொத்தமாக தொடர் சரிவைச் சந்தித்துவரும் நிலையில் சோனியின் கேமிங் பொருள்கள் விற்பனை வெகுவாக குறைந்துள்ளது. இந்த பணி நீக்கம் அமெரிக்கா முதல் ஆசியா வரை உள்ள சோனியின் பிரிவுகளில் வேலை செய்வோரை உள்ளடக்கியது.

ப்ளே ஸ்டேஷன் 5 சாதனத்தின் விற்பனை எதிர்பார்ப்பு கணக்கீடு குறைந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடும் முடிவுகள் தவிர்க்க



முடியாதவை எனத் தெரிவித்துள்ளார்.

சோனி நிறுவனத்தின் கேமிங் பிரிவின் தலைவர் ஜிம் ரியான். இந்தப் பணி நீக்கம், நிறுவனத்தின் வளர்ச்சி, பகிர்மானம் மற்றும் புதிய தயாரிப்பு அறிமுகம் உள்ளிட்டவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரியான் மார்ச்சில் பணி ஓய்வு பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "மரியம் நவாஸ்" - முதல் பெண் முதலமைச்சரானார்



பாகிஸ்தான் நாடாளுமன்றம் மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட 5 மாகாண சட்டசபைகளுக்கும் பொதுத்தேர்தல் கடந்த (08.02.2024) ஆம் திகதி நடந்தது. இதில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பஞ்சாப் மாகாண சட்டசபைக்கு நடந்த தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் சுயேட்சைகள் மரியம் நவாஸ் ஷெரீபுக்கு ஆதரவு தந்தனர். பஞ்சாப் மாகாண சட்டசபையானது முதலில் கூட்டத்தொடரை தொடங்க உள்ளது. பஞ்சாப் சட்டசபையை கடந்த வெள்ளிக்கிழமை கூட்டும்படி கவர்னர் பலிகுர் ரகுமான் அழைப்பு விடுத்திருந்தார். மூன்று முறை பிரதமராக பதவி வகித்த நவாஸ் ஷெரீப் மகள் மரியம் நவாஸ் பஞ்சாப் மாகாணத்தின் முதல் பெண் முதல் மந்திரியாக தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், கூட்டணிக் கட்சிகளான பாகிஸ்தான் மக்கள் கட்சி (பி.பி.பி), பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - கியூ (பி.எம்.எல்.கியூ) மற்றும் இஸ்டேகாம் - ஐ - பாகிஸ்தான் கட்சி (ஐபிபி) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார் மரியம் நவாஸ். 50 வயதான மரியம் நவாஸ் தனது தந்தையும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் மற்றும் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ள தனது சித்தப்பா ஷாபாஸ் ஷெரீப் ஆகியோரது முன்னிலையில், ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் பஞ்சாப் முதல்வராகப் பதிவியேற்றார்.

இதைத் தொடர்ந்து உரையாற்றிய மரியம் நவாஸ், தனது தந்தை அலங்கரித்த பதவியில் தான் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார். பஞ்சாப் மாகாணத்தின் ஒவ்வொரு பெண்ணும், பெண் முதல்வரைப் பார்த்து பெருமிதம் கொள்வதாகவும், இதேபோல, பெண்கள் தலைமைப் பதவியேற்கும் சூழல் எதிர்காலத்திலும் தொடரும் என்ற நம்பிக்கை வந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

# வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் பளுதூக்கலில் சாதனை



2024.02.23, 24, 25 ஆம் திகதிகளில் காலி போத்திவேல தேசிய பாடசாலையில் நடைபெற்ற இளையோர், கனிஷ்ட, சிரேஸ்ர விளையாட்டு போட்டியில் வ/வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலய மாணவிகள் இருவர் தங்கப் பதக்கமும், ஒரு வெள்ளிப் பதக்கமும், ஒரு வெண்கல பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

பா.கிசாளினி 49 kg எடை பிரிவில் 80 kg எடையை தூக்கி முதலாம் இடத்தையும், த.வன்சிகா 64 kg எடை பிரிவில் 44 kg தூக்கி முதலாம் இடத்தையும், க.அபிசாளினி 81 kg எடை பிரிவில் 70 kg தூக்கி இரண்டாம் இடத்தையும், ச.அனுஷா 59 kg எடைபிரிவில் 61 kg எடையை தூக்கி மூன்றாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களை பயிற்றுவித்த ஞா.ஜீவன் ஆசிரியர் அவர்களுக்கும், வெற்றியீட்டிய மாணவிகளுக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# சிறிய மீனில் இப்படியும் சத்தம் எழுப்ப முடியுமா?





ஜெர்மனியின் தலைநகர் பெர்லின் (Berlin) நகரில் ஒரு ஆராய்ச்சி கூடத்தில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் வினோத ஒலி கேட்டது. இதற்கான காரணத்தை கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிரமாக முனைந்தனர். இதில், டேனியோனெல்லா செரிப்ரம் (Danionella cerebrum) எனும் மிகச் சிறிய வகை மீன் ஒன்று அதன் அங்கங்களில் ஒன்றான "ஸ்விம் ப்ளாடர்" (swim bladder) எனும் உறுப்பில் இருந்து சக்திமிக்க சீரான ஒலியை உண்டாக்குவது தெரிய வந்தது.

இந்த மீன் வெளிப்படுத்தும் ஒலியின் அளவு மீன் தொட்டியின் நீர் நிலைகளில் 140 டெசிபெல் (decibel) என பதிவாகியுள்ளது. இது ஒரு துப்பாக்கி சூட்டின் ஒலிக்கு நிகரானது என்பது குறிப்பிடத்தக்கது. 12 மில்லிமீட்டர் நீளம் மட்டுமே உள்ள இந்த டெனியோனெல்லா மீன் எழுப்பும் ஒலிதான் உலகின் அனைத்து வகை மீன் இனத்திலும் எழுப்பப்படும் அதிகமான ஒலியாகும்.

'டிரம்மிங்' (drumming) எனப்படும் இத்தகைய ஒலியானது ஒரு வகையான செய்தி பரிமாற்றம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். டெனியோனெல்லா மீன்களின் உடல் கண்ணாடி போன்று ஒளி ஊடுருவும் தன்மை (transparent) கொண்டதால் அவை உயிருடன் இயங்கும் போதே ஆராய்ச்சி செய்வது எளிதாக இருந்தது. இந்த ஆராய்ச்சியின் போதுதான் டெனியோனெல்லா இருந்த மீன் தொட்டியை கடந்து சென்றவர்கள் அது எழுப்பும் ஒலியை கேட்க முடிந்தது. மிகச் சிறிய வகை மீன் மிக அதிக ஒலியை எழுப்பும் வினோதம், ஆராய்ச்சியாளர்களை மட்டுமின்றி கடல்வாழ் உயிரின ஆர்வலர்களுக்கும் சுவாரஸ்யமான செய்தியாக உள்ளது.

# உலகின் மிக உயரமான ஆணும், மிக குள்ளமான பெண்ணும் சந்திப்பு



உலகிலியே மிகவும் உயரமான ஆணாக அறியப்படுபவர் சுல்தான் கோசன். இதேவேளை உலகின் மிகவும் குள்ளமான பெண்ணாக ஜோதி ஆம்கே அறியப்படுகிறார்.

அமெரிக்காவின் கலி∴போர்னியாவில் இவர்கள் இருவரும் நேரடியாக சந்தித்து மகிழ்ச்சியை பரிமாறி கொண்டுள்ளனர்.

2009-ம் ஆண்டில், 8 அடி 3 அங்குல உயரம் கொண்ட உலகின் மிக உயரமான மனிதராக சுல்தான் கோசென் சாதனை படைத்தார்.

அதே ஆண்டு, உலகின் 'உயரம் குறைந்த பதின்ம வயதுப் பெண்' என்ற பட்டம் ஜோதி ஆம்கேக்கு வழங்கப்பட்டது.

அப்போது 15 வயதான ஜோதி ஆம்கேவின் உயரம் 2 அடி 0.3 அங்குலமாக இருந்தது. அடுத்ததாக ஆம்கேக்கு 18 வயதாகும் போது, மீண்டும் அளவிடப்பட்ட போது அவரது உயரம் 2 அடி 0.7 அங்குலம் என்பதாக இருந்தது.

இவர்கள் இருவரும் கடந்த 2018 ஆம் ஆண்டு எகிப்தில் சந்தித்தனர். இதனைத்தொடர்ந்து 6 ஆண்டுகளுக்கு பின்பு இவர்கள் இருவரும் அமெரிக்காவின் கலி∴போர்னியாவில் மீண்டும் தற்போது சந்தித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சூரியனில் ஏற்பட்ட மாற்றம் - படம்பிடித்த நாசா



சூரியனின் இடது பக்கத்தில் ஏற்பட்ட வெப்பச் சிதறலை நாசா விண்கலம் படம்பிடித்துள்ளது.

சூரியனை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, "சோலார் டைனமிக்ஸ்" என்ற ஆய்வு விண்கலத்தை அனுப்பியது.

இந்த விண்கலமானது கடந்த *2010*-ம் ஆண்டு முதல் சூரியனை ஆய்வு செய்து பல்வேறு தகவல்களை பூமிக்கு அனுப்பி வருகிறது.

இந்த நிலையில், சூரியனின் இடது பக்கத்தில் ஏற்பட்ட வெப்பச் சிதறலை இந்த விண்கலம் தற்போது புகைப்படம் எடுத்துள்ளது.

அதேவேளை இதுபோன்ற சூரியச் சிதறல்கள் தொலைத்தொடர்பு, மின்சேவைகளை பாதிக்கக்கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 03.03.2024 அன்று வெளியிடப்பட்டது.